# விவேகபோதினி

| வருஷச் சந்தா | |
|---|---|
| உள்நாடுகளுக்கு | ரூ. 4 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. 5 |
| தனிப்பிரதி - | அ. 6 |

"எப்பொருள் எத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"
--திருவள்ளுவர்.

| விளம்பர விகிதம் | |
|---|---|
| முழுப்பக்கம் | ரூ 10 |
| அரைப்பக்கம் | ரூ. 6 |
| கால்பக்கம் | ரூ. 3 |

தொகுதி XI | சித்தார்த்தி௵ சித்திரைமீ :: 1919-௵ மேமீ | பகுதி 11

## லக்ஷ்ய பேதம்

### CONFLICT OF IDEALS

சூழப் பற்றின சுற்று மெயிற்றின்
போழக் கிற்றில வென்று புகன்றார்
வாழித் திக்கின் மயக்கின் மதந்தாழ்
வேழத் துக்கிடு மின்னென விட்டான்.

கய்யிற் சால்களின் மார்பு கழுத்தில்
தெய்வப் பாச முறப்பிணி செய்தார்
மய்யற் காய்கரி முன்னுற வைத்தார்
பொய்யற் றூழமி தொன்று புகன்றான்.

எந்தாய் பண்டொ ரிடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதற்பொரு ளேயென்
றுந்தாய் தந்தை யினத்தவ னேத
வந்தா னென்றன் மனத்தின னென்றான்.

என்னு முன்ன மிருங்க ளிறுந்தன்
பொன்னு ரோடை பொருந்த நிலத்தின்
அன்னு னைத்தொழு தஞ்சி யகன்ற
தொன்னு ரத்திற மெய்தி யுரைத்தார்.

தள்ளத் தக்கில் பெருஞ்சயி லத்தோ
டெள்ளக் கட்டி யெடுத்து விசித்துக்
கள்ளத் திங்கி வனைக்கரை காணு
வெள்ளத் துய்த்திடு வீரென விட்டான்.

நடுவொக் குந்தனி நாயக னும்மம்
விடுகிற் கின்றில னுகலின் வேலை
மடுவொத் தங்கதின் வங்கமு மன்றாய்க்
குடுபத் தன்மைய தாயது குன்றம்.

மோதத் தூர்திரை வேலையின் மூழ்கான்
மீதுற் றூர்சிலை மீது கிடந்தான்
ஆதிப் பண்ணவ னுயிர நாமம்
ஓதற் றுன்மறை யொல்லை யுணர்ந்தான்.

அத்தன் மையதிற் தவருந் திறலோன்
உய்த்துய்ம் மினென்முன் னெனவுய்த் தனரால்
பித்துண் டதுபேர் வுறுமா பெறுதும்
கைத்துங் கடுநஞ் சினெனக் கனலா.

ஊனே டுயிர்வே றுபடா வுபயம்
தானே யுடையன் றனிமா யையினல்
யானே யுயிருண் பலெனக் கனலா
வானே மூகடுங் கிடவர் தனனுல்.

வந்தா னவனங் கியென்மன் னுயிர்தான்
எந்தாய் கொளவென் னினையே விதுதான்
உந்தா ரியதன் றுலகியா வுமுடன்
தந்தார் கொளநின் றதுதா னெனலும்.

வேறு.

ஏவரே யுலகந் தந்தா ரென்பெய ரேத்தி வாழும்
மூவரே யல்லராகின் முனிவரே முழுதுந் தோற்ற
தேவரே பிறரே யாரே செப்புதி தெரிய வென்றான்
கோவ மூண்டெழுந்தக் கொல்லான் காட்டுமேற்
காட்சி கொள்வான்.

உலகுதந் தானும் பல்வே றுயிர்கடந் தானு முள்ளுற்
றுலைவிலா வுயிர்க டோறு மங்கங்கே யுறைகின் றானும்
மலரினில் வெறியு மெள்ளி லெண்ணெயு மற்றுங் கே-
ளாய்
அலகிறெல் புகழும் பற்றி முற்றிய வரிகா ணத்தா.

கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.

# விவேக போதினி

தொ.11] சித்தார்த்தி௵ சித்திரைமீ௴ [ப. 11

## ஊடலுவகை

### THE ECSTASY OF LOVE

நாயகர்க்குள் நாயகனை நாடுமாய நங்கையற்கு
மாயவினை போக்கியின்ப மல்கினன் — தூயமலர்ப்
பாதம் பணிந்து பரவுவார்க் கேதகான்
ஏதம் பிணிக்கு மிடர்?

ஸ்ரீகிருஷ்ணபகவானது பெருமையைப் பாராட்டுவாரும், அவரது உண்மை நோக்கங்களை யுணரமுடியாது கவிந்துகிடக்கும் வெறுப்புக் கடலுள் மூழ்கி, நல்வழிவரும் ஞானக் காற்றின்றி மூச்சுவிடத் தத்தளிக்கு மதாந்தரத்தினரும், ஒருங்கே கவனிப்பது அவ்வெம்பெருமான் கோபிகையர்களிடம் நடந்துகொண்ட நெறியே யாகும். கோபியரோடவருடையதாகக் காவியங்கள் கணக்கற விரிக்கும். அவை கவிகளின் மனத்தைக் களவியலிற் கடத்திப் பேரின்ப வழியில் செலுத்த இடந்தந்தன. அவ்வாறு அக்கவிகள் செய்வது தகுமா என்பதொரு கேள்வி. இதனைச் சற்றே ஆராய்வது தவறாகாது.

கோபாலர்களது மனதைச் சுத்தப்படுத்தி அவர்களுக்குத் தமது மூல முதற்றன்மையைக் காட்டியது முன் கவனித்த விஷயமேயாகும். எனவே கோபாலர்கள் கிருஷ்ணபிரானது ஒவ்வொரு செயல்களையும் பரமாத்புத வைபவங்களாகவே மதித்து வந்தனர். அவர்களைத் தமது வழிபடுத்தியதும், கோகுலத்துப் பெண்மக்களையும் தம்மிடம் அன்புகொள்ளுமாறு செய்யவேண்டுமென அவர் பேரன்பு கொண்டனர்.

அப்பொழுது நல்ல கார்காலம்; இரவில் பால்போல் எங்கும் நிலவு படர்ந்து விளங்கியது; இயற்கைபொலிவிற்கு வெள்ளிக் கவசமிட்டதுபோலத் திகழ்ந்தது. அச்சமயம் பிருந்தாவனம் கண்டாரது கண்ணையும் கருத்தையுங் கவரும் காட்சி வாய்ந்திருந்தது; யாவர் மனமும் உவகையிற் பாய்ந்து கிடந்தது; எங்கும் பரமசாந்தியே குடிக்கொண் டிருந்தது. அம் மனோரம்மியமான ஸமயத்தில் கண்ணபிரான் தமது நாதப்ருஹ்ம லயமாகி விளங்கிய புல்லாங்குழலை, தம் அதரங்களின்மேல் பதித்து, அதன் ஸ்வரவழியே எவ்வுயிரிடத்தும் பேரன்போடுவிளங்கும் தமதுஉயிர்க்காற்றைச் செல்லவிடுத்து, யோகமாயை யெங்குங் குடிகொள்ளக் கானஞ் செய்தனர். உண்மை நெறியின் உன்னத நிலையிலிருந்து சற்றுஞ் சலியாது, அப்பிருந்தாவனத்தின் பூஞ்சோலையில் அவர் வாய்விட்டு வெளிவந்த கானும்மிருதத்தைக் கேட்கக் கேட்க யாவர் மனதும் பேரன்பிடங்கொள்ளத் தலைப்பட்டது. காதலை எழுப்பும் அவ்வினிய இசையைக் காதாற் பருகிய கோபியர் உள்ளன்பு தூண்டக் கண்ணன் மேல் காதற் கொள்ளலாயினர்; அவ்வெழுச்சியின் மிகையால் அவர் பரபரப்புடன் ஓடிவரலாயினர். அன்னமிட்டுக் கொண்டிருந்தார் சிலர், அப்படியே அதைவிட்டு வந்தனர்; கணவனிடமிருந்தார் அவனைத் தனியே விட்டு வந்தனர் சிலர்; பாலூட்டும் குழந்தைகளை உதறிவிட்டு ஓடிவந்தவர் சிலர்; தாமுண்ணுஞ் சோற்றை எறிந்துவிட்டு வந்தவர் அநேகர்; தங்கள் மேனியை மினுக்கவெனப் பூச்சுஞ்சாந்தமு மிட்டுக்கொண்டிருந்தார் அவ்வேலையை விட்டுஓடிவந்தனர்பலர்; தமதுவேலைகளை இருந்தது இருந்தவாறாக விட்டுவிட்டு அக்கோகுலத்துப்பெண்கள் கண்ணனை அடையப் பேராவல் கொண்டனர்; ஒவ்வொருவரும் கண்ணன் மேல் காதல்கொண்டே வந்தனர்; எனினும் தம்முள் பிணக்கமற்று, வெறுப்பற்று, பெருங்கடலைச் சேரச் செல்லும் மஹா நதிபோல அவர் உள்ளம் எழும்பிக் குதிக்க, அந்தத் தேவகீதம் பொழியுமிடஞ் சேர நடந்தனர்.

அவர்க்கென்றும் கண்ணன்மேலே கண்ணென்பது தவறாகாது. கண்ணனே தமக்கேற்ற கணவனென்பது அவர் திடமான எண்ணம்; எப்பொழுதும் அவரைப்பற்றியே கனவு.

கடிக்க ஒரு எறும்பும் இல்லை, காதில் மினுக்க ஒலியும் இல்லை.

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தர்க்கீழ்க்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழிநான்'

எனவே அவர் தமது கனவின் திறத்தை வெளியிடுவர். அத்தகைய மனோவேகத்திருந்த அவர் அக்காதலிசையைக் கேட்கப் பரவசமாகிக் கண்ணனைக் காணவருவதில் என்ன அதிசயம் ? காதல் வெள்ளம் கரைபுரண்டு பெருகினால், அது இல்லறக் கரைகளைக் கடக்காதிருக்குமோ ? ஆகவே முற்றத் துறந்தவரது உள்ளம்போல அவருள்ளம் அப்போது கண்ணனைக் காணாது தவித்தது; பரதவித்தது. வரும் வழியெல்லாமவர் மரங்களுடனும், செடிகளுடனும் கண்ணனைக் காட்டுமாறே கேட்டு வந்தனர்.

தந்தையும் தாயுமுற் றாரும் நிற்கத்
தனிவழியே போயினா ளென்னும் சொல்லு
வந்த பின்னைப் பழிகாப் பரிது
மாயவன் வந்துருக் காட்டு கின்றான்
கொந்தள மாக்கிப் பரக்க கழித்துக்
குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற
நந்த கோபா லன்கடைத் தலைக்கே
நள்ளி ருட்க ணென்னை யுய்த்திடுமின்.

என, என்றும் ஆவலோடு விளங்குவர் அன்று மேலும் பரபரப்புடன் கண்ணனைத் தேடினர்; அம் மதுராநாதன் செய்த மதுர நாதம் பிரதித்துவனி செய்யுமிடத்தை அடைந்து, தமது உடம்பின்மேலிருந்த இச்சைமுற்று மற்றுக் கண்ணனே ஸர்வலோக சரண்யனாக எண்ணினர்; மனக்குறை யற்றனர்; கர்மவழியின் போக்கை யறுத்தனர்; ஸர்வலோக நாயகனாகிய அவரே தமக்கு நாயகனென எண்ணினர்; தமது காதல் முந்தக் கண்களில் ஆநந்தக் கண்ணீர் வடித்தனர்.

அக்கண்களிலிருந்து வெளிவந்த காதல் வெள்ளத்தைக் கண்ட கிருஷ்ண பரமாத்மா அவரை நோக்கி "நீங்கள் இந்நள்ளிரவில் இங்கு வர என்ன காரணம்? இரவு வேளை யாயிற்றே. இங்கு வந்தால் உம்மை உமது உறவினர் தேடார்களா ? இது அடுக்குமா ? மேலும் இந்நிலவின் பெருக்கில் விளங்கு மிக்காட்சியைக் கண்டாயிற்றே ! உமக்கினி இங்கு என்ன வேலை? என்னிடங் கொண்ட பேரன்பால் நீங்கள் இங்கு வந்தது ஸரியே. இனி உமது புருஷரை அடையுங்கள். நான் உங்களுக்கெல்லார்க்கும் வேண்டியவனானாலும் ஒரு புருஷனை யாவன். நீங்கள் அந்நிய புருஷனுடன் இரவில் தங்குவ கூடாது. ஆகையாற் போங்கள்; வீட்டைச் சேருங்கள். உள்ளத்தை உமது பக்தி ஓடையிலேற்றி என்னிடம் அனுப்பினால் அதுவே போதும். அதனாலேயே நான் பரமப்ரீதியை யடைகிறேன். என்னுடனிருந்து என்னிடம் பக்தியற்று விளங்கமுடியாது, அதற்கென்ன செய்வது? என்னைவிட்டுப் பிரிந்திருந்தாலும், எனது லீலா விநோதங்களைக் கேட்டு, அவற்றில் ஈடுபட்டு, வழிபட்டு அசைவற்று நிலைப்பதே எனக்குப் பேரின்ப மளிக்கும். இனிச் சற்றும் இங்குத் தாமதியாது உங்கள் வீட்டை அடையுங்கள். தடைசெய்யாது போவீர்களாக!" எனப் புத்திமதி கூறினர். இவ்வாப்த மொழிகளை அவர் ஏன் கவனிக்கவில்லை ?

"ஹே நாத ! நாங்கள் அநாதைகளானோம்! தமது அதரத்தின் சுவையை உணரும் அப்புல்லாங்குழலின் அதிருஷ்டம் யாம் அடைந்தோமில்லை ; தம்முடன் சேர்ந்து கோபாலர்கள் எல்லோரும் அநுபவிக்கும் பேற்றை அடைய யாம் கொடுத்துவைக்கவில்லை போலும் ! தாங்கள் மூவுலகுக்கும் மூல நாயகன். மனைவியர்க்குக் கணவனை என்பது உலகநெறி : அவர் மூலமாக உம்மைக் காண்பதே மணத்தின் மருமம். உம்மை நேரிற் காணும் பாக்கியம் பெற்றோர்க்குக் கணவரால் பெறவேண்டிய பேறு பெற்றாகு மன்றோ ? அவித்யா வாசனையைப் போக்கும் அவ்வினிய காணம்ருதத்தைப் பானஞ்செய்தும், உம்மையல்லாத எவர்மேல் பற்றிருக்க முடியும்? அற்றது பற்றெனில் உற்றது வீடு அல்லவா ? பெரும் பேற்றை யளிக்கும் பரம் பொருள் கண்ணெதிரேயிருக்க, கல்மேல் முட்டிக் கொள்ளுபவர் குருடரே யாவரன்றோ ? உமது பாதபக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முத்தி பெறலா மல்லவா ? எமதுள்ளத்தை முற்றுங் கவர்ந்த கள்வன் தாங்களே. உள்ளத்தைக்கவர்ந்தவாறு உடலையுங் கவர்ந்தெங்களைத் திருப்திபடுத்துவது தமது கடமை. தாங்கள் அடைந்தாரைக் காப்பாற்றி அவர் கோரிக்கையை ஈடேற்றுபவரல்லவா ? இதோ வணங்குகின்றோம். தயவு செய்தெங்களை ஐம்புல வியாபாரங்களற ஆண்டு ஆசீர்வதியுங்கள்."

கடுஞ் செட்டுக் கண்ணைக் கெடுக்கும்.

இவ்வாறு கோபிகள் சொல்லக் கேட்ட கண்ணன் நடுநிலை கோணாது தமது மாயா விலாசத்தால் அவரைத் திருப்திபடுத்த எண்ணங் கொண்டனர்; அவ்விரவை அவரிஷ்டப்படி கழித்தனர்; கோபியர் ஒவ்வொருவருடன் அதே ஸமயம் தனித்தனிக் கண்ணனாக விருந்து அவரைத் திருப்தி படுத்தினர். தமக்கு நிகரில்லையென அப்பொழுது விளங்கிய கோபிகட்கு இணைவேறு இருக்கமுடியாது. எனவே அவர் அளவு கடந்த கர்வங் கொண்டு விளங்கினர். கர்வம் கொண்டவர்க்குச் சுகம் நிலைக்குமா?

கோபியர்களது மனவெழுச்சியையும், தம்மையவர் அடைந்ததால் அடைந்த அளவு கடந்த இறுமாப்பையுங் கண்ட எம்பெருமான் அவரது வீண் செருக்கையொழித்து அவரது உண்மை நிலையை உணர்ந்து தன்னையே நினைக்கும்படி செய்யத் தமது உருவு அவர்முன் தோன்றாதிருக்கும்படி தமதுமாயா விலாசத்தை வெளியிட்டனர். இருந்தாற்போலிருந்து கண்ணன் மறைந்ததைக் கண்ட கோபியர் நடுநடுங்கினர்; பயந்தனர்; துயர் அடைந்தனர்; ஒவ்வொருவரும் தம்மிடந்தான் கண்ணன் பேரன்பு கொண்டிருந்ததாக எண்ணியிருந்த எண்ணந் தூண்டத் தூண்டக் கண்ணனைக் காணவேண்டுமென்ற பேராவலோடு அவ்வன முழுதும் அலைந்தனர்.

"அணுங்க வென்னைப் பிரிவுசெய்
தாயர் பாடி கவர்ந்துண்ணும்
குணுங்கு நாறிக் குட்டேற்றைக்
கோவர்த்தனனைக் கண்டீரே?
மாலாய்ப் பிறந்த நம்பியை
மாலே செய்யும் மணாளனை
ஏலா பொய்க ளுரைப்பானை
யிங்கே போதக் கண்டீரே?
கார்த்தண் கமலக் கண்ணென்னும்
நெடுங் கயிறு படுத்தியென்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்
ஈசன் தன்னைக் கண்டீரே?"

என இவ்வாறவர் அக்காட்டு மரங்களையும் மலைகளையும் கண்ணிற்கெதிர் பட்டவைகளையுங் கேட்டுக் கேட்டுப் பித்துக்கொண்டு திரிந்து அக்கண்ணனைத் தேடினர். காட்டின் வழியே தோன்றும் அடிச் சுவடுகளைக் கண்டு கண்ணன் ஓர்கோபியுடன் தனியே சென்றதாக எண்ணி, அவர் பிரிவினால் ஏற்பட்ட துயர்க் கடலில் குளித்து மனம் விம்மி விம்மி நெடுமூச்சு விட்டு நிலைகலங்கினர்; "அகோ! அக்கோபியைப்போல் யானும் அவருடன் ஏகாந்தமாக விருக்கப்பாக்கியம் பெற்றிலேனன்றோ? வீண் செருக்கு வினையாய் முடிந்ததே. என்னிடந் தான் கண்ணன் மற்றவரிடத்திற் காட்டிலும் பேரன்புடன் விளங்கியதாக எண்ணியிருந்தேனே. அவரை நேரிற் காணும் பாக்கியமற்றேனே! 'பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே பற்று நான் மற்றிலேன்!' 'யாரொடு நோகேன் என் துயர் 'யார்க் கெடுத்துரைக்கேன், ஆண்ட நீ அருளிலை யானால்?' எளியேனை காப்பாற்றுவது தமது பாரமாயிற்றே. ஸர்வ பந்தங்களையுமொழித்து, மூவாமுதல்வனெனத் தங்களைச் சரணடைந்த எம்மைச் சுகத்தே சற்றேயிருத்தி, இடையே இவ்வாறு நட்டாற்றில் போக்கிவிட்டால் நான் என் செய்கேன்?" என்றவர் ஒவ்வொருவரும் எண்ணும்போதே அவர் மனங்கிளுகிளுத்து

அத்தனாகி யன்னையாகி யாளுமெம்பி ரானுமாய்
எத்தொவ்வாத பல்பிறப் பொழித்து நம்மையாட் கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தனால இடர்க்கடல் கிடத்த ஏழை நெஞ்சமே

என்ற எண்ணங் கொண்டு சாந்தி பெற்றது.

அப்போதவர் அளவு கடந்த ஆநந்தமடைந்தனர். கண்ணனது திருவிளையாடல்களில் ஈடுபட்டுத் தாமே கண்ணனாக எண்ணி எண்ணி உளம் நெக்குநெக்குருகுவர்; கண்களில் ஆநந்த நீர் சிந்த அவ்வாடல்களை அபிநயித்தாடத் தலைப்பட்டனர். சிலர் கண்ணனாகவும் சிலர் பூதனை முதலியர் போலவும் பாவித்துக் கண்ணனது சிறுநாள் ஆடல்களையெல்லாம் நடித்தவண்ணமாய் அக்காட்டுள் கண்ணனைத் தேடிக்கொண்டிருந்தனர்; முற்கண்ட அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்துகொண்டேயிருந்தனர். இடையே அக்கோபி கீழே கிடக்கக் கண்ட அவர் அவளைத் தேற்றினர்; அவ்வாறிருக்கக் காரணங் கேட்டனர்.

"அகோ! நான் என்னெனக் கூறுவது! அவ்வினிய குழலோசை என் மனத்தைக் கொள்ளை கொண்டது. என்னை மாத்திரமன்று;

கடைசிச் சோற்றுக்கு மோரும், கால்மாட்டிற்குப் பாயும் வேண்டும்.

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிக்கக்
குறுவெயர் புருவங் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொ டூதின போது
பறவையின் கணங்கள் கூடு திறந்து
வந்து சூழ்ந்து படுகாடுகிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே.

அவ்வத்புத நாதவொலியா லிழுக்கப்பட்ட என் உள்ளம், மற்றதை யெல்லாம் துறந்து, கண்ணனையே கண்டடைய அலைந்திங் கடைந்தது. என்னை இங்கு பூவா லலங்கரித்து, வாயாற் புகழ்ந்துரைத்து, அன்போடு பரிந்து, வெகு உல்லாஸமுடன்என்னோடு அவர்விளையாடிவந்தனர். அவரோடு ஸரியாக நடக்கமுடியா என்னையவர் தம் தோள்மேல் எடுத்துச் செல்லும் போது என்னினும் யார் பேறு பெற்றார் என எண்ணினேன். அடுத்த க்ஷணத்தில் அவரை யிங்குக் காணேன்; திடீரென எங்கோ மறைந்துவிட்டனர். கருவத்தால், அந்தோ, நான் கெட்டுவிட்டேன். உள்ளந்துறந்து, அகந்தை ஒழிந்து விளங்குவார் உள்ளத்தி லல்லவா அவருலாவுவது?" எனத் தனது கதையை வெளியிடக் கேட்ட மற்ற கோபியரும் தாம் கொண்டிருந்த கருவமற்று அவரது பெருமையை விரித்துரைக்க வாரம்பித்தனர். தமது சிறுமையையும் பகவானது பெருமையையும் எண்ணியவர் கண்ண பிரானது அந்தராத்ம நிலையை நாடியறிய உள்ள முருகப் பாடிய அவரிடம் கண்ணன் எவ்வாறு விளங்கினர்?

எல்லா மவன்செயலே என்றிருக்கும் வல்லார்க்
கில்லைகா ணேகாத திறையே பராபரமே.

(தொடரும்.)

# சூரியனுடைய சக்தி

## SOLAR ENERGY

பிரபஞ்சமானது மூன்று நித்திய வஸ்துக்களால் நிறைந்துள்ளது என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். அதாவது (1) மூலப் பிரகிருதி, (2) ஜீவாத்மா, (3) பரமாத்மா. இந்த மூன்றும் நித்தியமாய் என்றென்றைக்கும்அழிவில்லாமலிருக்கும் பொருட்கள். பரமாத்மா என்பது கடவுள். அவர் இப்பிரபஞ்சத்தில் எல்லாப் பொருள்களிலும், எல்லா விடங்களிலும் அந்தர்யாமியாய்ப் பிரவேசித்து நிறைந்து பூரணமா யிருக்கிறார். மகத்துக்குள் மகத்தாயும், அணுக்குள் அணுவாயும், ஆத்மாவுக்குள் ஆத்மாவாகவும் இருக்கிறார். அவர் இல்லாத இடமே கிடையாது. ஸ்தூலப் பொருட்களைச் சூட்சுமப் பொருட்களாக்கி அவைகளைத் தம்முள் அடக்கிக்கொண்டு சிலகால மிருப்பர். அண்டபிண்ட சராசரங்கள் ஒன்றுமே யில்லாமல் கடவுள் தாமே தனித்து எங்கும் பரவி அருபமாய் இருப்பர். அவர் உலகத்தை யுண்டாக்கி, பிரபஞ்சலீலை காணத் திருவுள்ளங்கொண்டால் தம்முள்ளடக்கியிருக்கும் ஸ்தூல ப்ரகிருதிப்பொருளைப் பஞ்சபூதங்களாக விகர்ப்பிக்கச் செய்வார். இப்படி அவர் திருவுள்ளம் பற்றும்போது முதல் முதல் இப்பிரபஞ்சமானது ஆகாயப் பரப்பில் வாயு ரூபமாகிச் சுழன்று அதில் அக்னியுண்டாகி, ஸ்தூல ப்ரகிருதிப் பொருள்கள் யாவும் அக்னிமயமான ஆவியாகிச் சுழன்றுகொண்டிருந்தது. நாளடைவில் அந்த ஆவி உலோகப் பொருள்களை உலையில் ஊதி உருக்கி வார்த்ததுபோல் ஸ்தூலித்து வந்தது. இப்படிச் சுற்றிச் சுழன்றுகொண்டு வந்த உருகிய ஸ்தூலப் பொருளாகிய சூரியக் கிரஹமானது ஸ்தூலித்துக் கெட்டி யடைந்து வரும்போது சுற்றுச் சுழற்சியில் ஒரே மொத்தமாகச் சேர்த்துப் பிடித்திருக்கும் சக்தியின் வலிமை சற்றுக் குறைவடையவே அதிலிருந்து துண்டுகள் வேறுபட்டுச் சிதறுண்டு போயின. அவைகள் பூமண்டலமாகவும் சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, முதலான பல அண்டங்களாகவும் தோன்றி, மத்தியில் தன்னைத் தானே சுற்றிக்கொண்டிருக்கும் மகத்தான அண்டமாகிய சூரியக் கிரஹத்தின் கவர்ச்சியினால் அவ்வவற்றின் நிலையினின்றும் தவறிவிடாமல் சூரியனைச்சுற்றி வரும் கதியை யடைந்து நின்றன. இப்படி வேறான அண்டங்களும் உருகிய உலோகப் பொருளாகவே யிருந்து, அதிலிருக்கும் சூடு தணியத்தணிய வெளிப்பக்கம் ஆறிக் கடினமடைந்து மேற்புறணி கிட்டமாகியும் உள்பக்கத்திலுள்ள சூடு தணியாமல் அங்குள்ள ஸ்தூலப்பொருள் உருகியே நின்று கொஞ்சங் கொஞ்

சமாய் ஆறி வருகிறது. இப்பூமண்டலத்திலுள்ள சில பாகங்களில் எரிமலைகள் வாய் திறந்து அவைகளிலிருந்து பர்வதாக்கினிப் பிரவாகம் வெளிப்பட்டு அநேக மைல் விஸ்தீர்ணத்துக்குப் பாய்ந்து அங்குள்ள நாடுகளையும் பட்டணங்களையும் பாழாக்கிவிடுகின்றது. இதனால் இவ்வண்டத்தினுட்பக்கம் இன்னமும் உருகியபடியே யிருக்கிறதென்றும், சூடாறி ஸ்தூல ஸ்திதியை யடையவில்லையென்றும் தெரியவரும். கடினமடைந்த மேற்புரணி யானது பாறைகளாய் அமைந்து பல யுகங்களாகச் சூரியன், வாயு, தண்ணீர் இவைகளின் சம்பந்தத்தால் உடைந்து தகர்ந்து அரைக்கப்பட்டுப் பாறைத் தூளாகின்றது. இப்படிப் பிராணன் என்னும் ஜீவாத்மாவின்பிரவேசம் இதுவரையிலும் ஏற்படாத கேவல ஸ்தூல வஸ்துவாகிய பாறைத் தூளினிடத்தில் பரமாத்மாவின் உத்தேசப்பிரகாரம் ஜீவாத்மா பிரதிபலித்து முதல்முதல் கண்ணுக்குத் தெரியாத தாவர ஜீவ அணுக்களாகக் விகர்ப்பித்துத் தோன்றுகின்றன. அவற்றின் வளர்ச்சியால் அணுத்தாவர ராசிகள் உண்டாகி வளர்ந்து மடிகின்றன. இப்படியே சில நூற்றாண்டுகளாக நடந்தேறிவர, தாவர வர்க்கப்பொருள் வரவரப் பாறைத்தூளுடன் அதிகமாகக்கலந்து சேர்ந்து அதிலிருந்து பூவாதே தம்மினத்தைப் பெருக்கும் தாழ்ந்த தாவர வர்க்கங்களும், அவற்றினின்று புஷ்பித்துக் காய்த்து விதையுண்டாக்கிப் பல்கிப் பெருகிவரும் மேலான தாவர ராசிகளும் உண்டாயின. இவற்றிலிருந்து அணுரூபமான ஜந்துக்கள் உற்பவித்துப் படிப்படியாய் ஊர்வன, நகர்வன, நீர்வாழ்வன, பறப்பன முதலான பலவகை ஜந்துவர்க்கங்களும் அவற்றினின்று வானரமும் அதனின்று மனிதரும் தோன்றினர்கள். இது பிரபஞ்ச உற்பத்திசாஸ்திர க்கொள்கை.

இப்படிப் பிரபஞ்ச உற்பத்திக்கு முதற்காரணரா யிருந்தது பரமாத்மாவான கடவுளாயிருந்தாலும், அவர் முன் கூட்டி ஏற்படுத்தியிருக்கும் இயற்கை விதிகளையநுசரித்துப் பிரபஞ்சம் உண்டாகக்கடவது என்று திருவுளம் பற்றிய வுடனேயே சகல காரியங்களும் இயற்கையாய் நடந்தேறி வருகின்றன. அதன் பிரகாரம் மகத்தான சூரியக்கிரஹ அண்டமானது பிரபஞ்சத்தில ஆகாய மண்டலத்தின் நடுவே பம்பரம் சுழல்வதுபோலத் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு தன்னிலையாகிய உத்தராயண தக்ஷிணாயங்களுக் குள்பட்டு நிற்கவும், அந்த அண்டத்தால் கவரப்பட்டுச் சகலமான மற்ற அண்டங்களும் அதைச் சுற்றிச் சுழன்று வரவும் ஏற்பட்டது. பிரபஞ்சமானது நிலைநிற்பதும், அதன் சகலாண்டங்களிலுமுள்ள தாவர ஜீவ, ஜந்துஜீவ வர்க்கங்கள் உயிர்பெற்று உற்பத்தியாகி வளர்ந்து பல்கிப் பெருகுவதும் அவ்வவைகளுக்கு ஏற்பட்ட காலம் முடிந்தவுடன் அவை மாண்டு மடிந்துபோவதும் சூரிய பகவானுடைய மகத்தான சக்தியினாலேதான். சூரியப்பிரகாசம் இல்லையானால் பிரபஞ்சத்தில் ஒரு புல்லாவது பூண்டாவது செடியாவது கொடியாவது காயாவது கிழங்காவது பயிராவது பழமரமாவது பார்க்க முடியாது.

செடிகள் எப்படி உண்டாகின்றன? மண்ணில் ஒரு விதையை ஊன்றித் தண்ணீர் விட்டால் அதிலிருந்து ஒரு செடி உண்டாகிறது. ஆகவே விதைகளிலிருந்து செடிகள் பிறக்கின்றன என்றும், அப்படிச் செடிகள் பிறந்து வளர்வதற்கு விதைகளை மண்ணில் ஊன்றித் தண்ணீர் விடவேண்டும் என்றும் நமக்குத் தெரிகிறது. ஒரு விதை மிகவும் சிறிதாயிருக்கிறது. அதிலிருந்து பிறந்து வளரும் செடியானது மிகவும் பெரிதாயிருக்கிறது.

“தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா குமமே”

என்று நீங்கள் வாசித்திருக்கிறீர்கள். “இப்படி ஒரு சிறிய வித்திலிருந்து பிறக்கும் சிறு முளையானது வர வரப் பெரிதாய் வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து உயிர்வாழ்வது எப்படி? வளர்ந்த ஒரு பெரிய செடியை வெயிலில் உலர்த்தி நிறுத்துப் பார்த்தால் அதன் விதையைப் பார்க்கிலும் அது ஆயிரம் மடங்குக்கும் அதிகமாக இருக்குமல்லவா? விதையிலில்லாத இந்த அதிகமான வஸ்து அந்தச் செடிக்கு எப்படிக் கிடைத்தது? அந்த அதிக வஸ்து அந்தச் செடிக்குள் எப்படிச் சென்று தங்கிற்று?” என்னும் கேள்விகள் உடனே நமக்குத் தோன்றுகின்றன.

ஒரு குழந்தையின் தேகம் எப்படி வளா

கடுக்காய்க்கு அகணி நஞ்சு, சுக்கிற்குப் புறணி நஞ்சு.

கின்றது? அது முதல் முதல் தாய்ப்பால் குடித்து வளர்கிறது. அதன்பின் பலவித ஆகாரங்களை உண்டு வளர்கிறது. அதைப்போலவே ஒரு செடியும் உணவை உண்டு ஜீவித்து வளர்கிறது என்று தீர்மானிக்க வேண்டும்.

அப்படியானால் செடிகள் என்ன ஆகாரத்தை அருந்துகின்றன? அவைகளுக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கிறது? செடிகள் இங்குமங்கும் நடந்து திரிவதில்லை. அவைகள் முளைத்த இடத்திலேயேதான் நின்று வளர்கின்றன. நிலத்தில் செடிகள் முளைத்து வளர்கின்றன. அதற்குத் தண்ணீர் பாய்ச்சுகிறோம். செடிகளைச் சுற்றிலும் ஆகாயம் இருக்கிறது. இவ்விதமாகச் செடிகளுக்குச் சம்பந்தமுள்ளனவாக நிலமும், நீரும், ஆகாயமும் ஆகிய மூன்று வஸ்துக்கள்தான் இருக்கின்றன. செடிகள் உணவை அருந்துவது நிஜமானால் அவைகள் இம்மூன்று பொருட்களிடத்திலிருந்துதான் தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்க வேண்டும். வேறு வழிகளில் சம்பாதிக்க முடியாது; ஏனெனில் வேறு யாதொன்றும் செடிகளின் அருகில் இல்லை.

செடிகளைக் காயப்போட்டு எரித்தால் அதிகப் பாகம் புகையாகவும் ஆவியாகவும் போய்விடும். மீந்தது கொஞ்சம் சாம்பல். அதில் சில உலோக வஸ்துக்கள் இருக்கின்றன. புகையும் ஆவியாகவும் போனது கரிப்பொருளும், பிராணவாயுவும், ஜலவாயுவும், நைட்ரோஜன் வாயுவுமே. சுமார் இரண்டு ஏக்கரா நிலத்திலிருந்து விளைவான பயிரைக் காயப்போட்டு நிறுத்துப் பார்த்ததில் 4500 இராத்தல் இருந்தது. அதை ரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில்

1620 இராத்தல் கரிப்பொருள்.
1340 இராத்தல் பிராண வாயு.
177 இராத்தல் ஜலவாயு.
74 இராத்தல் நைட்ரோஜன் வாயு.
270 இராத்தல் சாம்பல்

இருந்தன. செடிகளுக்குள் இவைகளைத்தவிரத் தண்ணீரும் அதிகமாயிருக்கிறது. புல்லிலும் உருளைக் கிழங்குகளிலு மிருக்கும் வஸ்துக்களின் நிறையில்முக்கால்பங்கு தண்ணீர்தான். தசைப் பற்றுள்ள காய்கறிச் செடிகளில் இன்னும் அதிகத் தண்ணீர் அடங்கியிருக்கிறது. முள்ளங்கியிலும் பீட்ரூட் என்னும் சர்க்கரை முள்ளங்கிக் கிழங்குச்செடியிலும் 100-க்கு 80 முதல் 90பாகம் தண்ணீர்தான். வைரமுள்ள விருக்ஷங்களிலும் 100-க்கு 30 முதல் 60 பாகம் தண்ணீர் நிறைந்திருக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

மண்ணானது சிலிகன், அலுமினா, இரும்பு, கந்தகம், மகனிசியம், மர ப்பு, பிரகாசிதம் முதலிய பல உலோக வஸ்துக்களும் வெடியுப்பு போன்ற சில உப்புக்களும் செடிகொடிகளின் இலைகளும், ஜீவஜெந்துக்களின் கழிவுப் பொருட்களும் கலந்த ஒரு ஸ்தூல வஸ்து. ஆகாயமானது நைட்ரோஜன் என்னும் நிர்ஜீவமூல வாயுவும், பிராணவாயுவும், கரியமிலவாயுவும் கலந்த ஒரு வஸ்து. தண்ணீரானது பிராணவாயு ஜலவாயு இவ்விரண்டு வாயுக்களும் கலந்துண்டான வஸ்து. ஆகையால் செடிகள் தங்களுக்கு வேண்டிய கரிப்பொருளை ஆகாயத்திலுள்ள கரியமலவாயுவிலிருந்து இலைகளின் வழியாய் உட்கொள்ளுகின்றன. பிராணவாயுவை ஆகாயத்திலிருந்து இலைகளின் வழியாயும் தண்ணீரிலிருந்து வேர்களின் மூலமாயும் எடுத்துக் கொள்ளுகின்றன. ஜலவாயுவைத் தண்ணீரிலிருந்தே வேர்கள்வழியாய்க் கிரஹிக்கின்றன. நைட்ரோஜன் சத்தை நிலத்திலுள்ள நைட்ரேட் என்னும் ஒருவகை உப்புத் தினுசுகளிலிருந்து செடிகள் தங்கள் வேர்களின் வழியாய் அருந்துகின்றன. செடிகளை எரிக்கும்போது சாம்பலாக நீறும் உலோகப் பொருள்கள் மண்ணிலிருந்து செடிகளுக்குக் கிடைக்கின்றன.

இவ்விதமாகச் செடிகள் அருந்தும் ஆகாரத்தில் மூன்றில் ஒரு பாகம் கரியமிலவாயுவாகவே இருக்கிறது. இந்த வாயுவானது கரிப்பொருளும் பிராண வாயுவும் கலந்துண்டானது. சூரியப்பிரகாசம் உள்ளபோது செடிகள் தங்கள் இலைகளிலும் பச்சைநிறமுள்ள மற்றப் பாகங்களிலும்முள்ள கணக்கற்ற நுட்பமான வாய்களின்வழியாய்க் கரியமில வாயுவை உள்ளே வாங்கி அதைப் பிரித்துக் கரிப்பொருளைத் தமக்குள்ளிருத்திக்கொண்டு பிராணவாயுவை மட்டும் வெளியே விடுகின்றன. சூரியப்பிரகாசமில்லாதபோது இந்த வேலையைச் செய்யக்கூடிய சக்தி செடிகளுக்கில்லை. சூரிய ஒளியுள்ளபோதுதான் கரியமிலவாயுவிலிருந்து செடிகள் கரிப்பொருளைப் பிரித்துக் கிரஹித்து

கடிதான பிள்ளை பெற்றோருக்கு உதவுமா?

அதை மரப்பொருளாகவும் கட்டையாகவும் சர்க்கரையாகவும் தைலசத்தாகவும் செய்துகொண்டு வளர்கின்றன நாம் உண்ணும் உணவானது வயிற்றில் சீரணிக்கப்பட்டு இரத்தத்துடன் கலந்து பல உறுப்புகளுக்கும் சென்று அங்கங்கே எலும்பாகவும், தசையாகவும், கொழுப்பாகவும், தோலாகவும், உரோமமாகவும் நகங்களாகவும் எப்படி மாறுதலடைகின்றனவோ அதேவிதமாய்ச் செடிகள் அருந்தும் ஆகாரமும் அடிமரமாகவும், இலைகளாகவும், பூவாகவும், காயாகவும், கிழங்காகவும், சர்க்கரையாகவும் மற்றும் பலவித வஸ்துக்களாகவும் மாறுதலடைகிறது. இப்படி மாறுதலடைந்த பல பொருட்களிலும் ஒருவித சக்தியுள்ளடங்கியிருக்கிறது. தான்யங்களையும் காய் கனி கிழங்குவகைகளையும் மனிதர் உண்கிறார்கள். இலை தழை முதலியவைகளை மிருகங்களுண்கின்றன. மனிதர் பசியினால் மெய் சோர்ந்து கைதளர்ந்து கால்மெலிந்து கண் பஞ்சடைந்து களைத்துப் போயிருக்கும்போது கொஞ்சம் ஆகாரம் சாப்பிட்டால் கொஞ்சநேரத்துக்கெல்லாம் முன்போல் சரீரதிடம் பெற்று எப்போதும்செய்யும் வேலைச்யைசெய்யக்கூடிய சக்தி அவர்களுக்கு உண்டாகிறது. கால்நடைகளுக்கு ஆகாரம் கொடுக்கவில்லையானால் வண்டி, கலப்பை, கவலை முதலியவைகளை இழுக்கக்கூடிய சக்தி அவைகளுக்கில்லாமல் போகிறது. மறுபடி அவைகளுக்குச் சரியான ஆகாரம் கொடுத்தால் அவைகள் முன் செய்த வேலையைச் சிரமில்லாமல் செய்யக்கூடிய சக்தி அவைகளுக்குண்டாகிறது. இந்த சக்தியானது ஜந்து வர்க்கங்களுக்கு உண்டாவது அவைகள் உண்ணும் தாவர வர்க்கப் பொருள்களிலிருந்துதான். ஆகவே மனிதருக்கும் மற்ற ஜீவஜந்துக்களுக்கும் தேகபோஷணையின் பொருட்டும் வேலை செய்ய வேண்டியதற்காகவும் அவசியமான சக்தியைத் தாவரவர்க்கங்கள் கொடுக்கின்றன. தாவர வர்க்கங்கள் இப்பிரபஞ்சத்தில் இல்லாமல் போனால் ஜந்து வர்க்கங்கள் சிறிதுமின்றி நசிக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

தாவரவர்க்கங்களிலிருந்து ஜந்துவர்க்கங்கள் சம்பாதித்த இந்தச் சக்தி என்ன கதியாகிறது? மனிதரும் மிருகாதிகளும் வேலைசெய்வதிலும் பட்சிகள் பறப்பதிலும் கொஞ்சம் சக்தி செலவாகிறது. ஜந்துவர்க்கங்கள் சுவாசிக்கும்போது ஆகாயத்திலுள்ள பிராண வாயுவானது சரீரத்திலுள்ள கரிப்பொருளைத் தாக்கிச்சுட்டெரித்து உடம்புக்குவேண்டிய உஷ்ணத்தையுண்டாக்குவதில் செலவாகிறது. தாவரவர்க்கங்கள் சூரிய பகவானிடமிருந்து பெற்றுத் தம்முள்ளடக்கி வைத்திருந்த இந்தச் சக்தி இப்படிப் பலவகைகளில் செலவாய்ப்போவதுமல்லாமல் ஜந்து வர்க்கங்கள் மாண்டு மடியும்போதும் அவற்றின் ஸ்தூல சரீரங்கள் அழுகி அழிந்து பஞ்சபூதங்களும் வெவ்வேறாய்ப் பிரிந்து மூலப் பிரகிருதியுடன் கலந்து போகும்போதும் நாசத்தை யடைகிறது.

இவ்விதமாக அநேக நூற்றாண்டுகளுக்கு ஜந்து வர்க்கங்களுக்குத் தாவரவர்க்கங்கள் உதவும் சக்தியானது அவம்போய்க் கொண்டேயிருந்தால் பிரபஞ்சத்தில் உள்ள சக்தியானது மிகவும் குறைவடைந்து போகுமல்லவா? ஒவ்வொரு யந்திரத்தின் இயக்கத்துக்கும் எண்ணெயோ, கட்டையோ, நிலக்கரியோ எரிய வேண்டியது அவசியமாகின்றது. நிலக்கரியும் கட்டைகளும் இல்லையானால் புகைக்கப்பல்களும் புகைவண்டித் தொடர்களும் எப்படி ஓடக்கூடும்? உலகம் முழுவதிலும் எத்தனை கைத்தொழிற்சாலைகளில் நிலக்கரி எரிக்கப்படுகிறது! எத்தனை கோடிமைல்கள் தூரத்துக்கு ஒவ்வொருநாளும் புகைவண்டிகளும் புகைக்கப்பல்களும் ஓடிக்கொண் டிருக்கின்றன! இவைகள் வேலை செய்வதற்கு அவைகளில் எரிக்கப்படும் கட்டையிலும் நிலக்கரியிலும் தாவரங்கள் சேகரித்து வைத்திருந்த சக்தியல்லவா மூல காரணம்! அந்த ஏராளமான சக்தியைத் தினந்தோறும் எண்ணிறந்த ஜந்து வர்க்கங்கள் செலவழித்துக் கொண்டே யிருக்கின்றனவே. இப்படி எப்போதும் சக்தியானது அபரிமிதமாய்ச் செலவாகிக் கொண்டேவந்தால், பின் பிரபஞ்சத்தின் தொழில்களுக்கு வேண்டிய சக்திக்கு எங்கே போவது என்று யோசித்தால், பரமாத்மாவானவர் அதற்கொரு மார்க்கம் உண்டாக்கியிருக்கிறார். ஒரு வீட்டிலுள்ள ஒருவன் அங்குச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தானியத்தை யெடுத்து வெளியில் சிதறிவிட்டுப் போக அவ்வீட்டிலுள்ள மற்றொருவன் அவசரமாக ஓடிவந்து அதிக ஜாக்கிரதையுடன்

கடுகு போகிற இடத்தில், தடி எடுத்துக்கொண்டு திரிவான், பூசணிக்காய் போகிற இடம் தெரியாது.

சிதறுண்டு கிடக்கும் ஒவ்வொரு மணியாய்ப் பொறுக்கித் திரட்டி மறுபடியும் களஞ்சியத்தில் சேர்ப்பது போலவும், கடலில் கரைத்த காயத்தையும், ஆற்றில் கரைத்த உப்பையும் அனேகமாயிரம் ஜனங்கள் அதிக சிரமப்பட்டு வேலைசெய்து பிரித்தெடுத்து சேர்ப்பதுபோலவும், ஜந்து வர்க்கங்களால் செலவழிக்கப்பட்ட சக்தியை தாவர வர்க்கங்கள் மறுபடியும் சம்பாதித்துச் சேகரித்து வைப்பதற்கேற்ற மார்க்கத்தை கடவுள் உண்டாக்கியிருக்கிறார்.

கட்டையும் கரியும் எரியும்போதும், ஜந்து வர்க்கங்கள் சுவாசிக்கும்போதும், அவற்றின் சரீரங்கள் அழுகிக் கெடும்போதும் அங்கிருந்து கரியமிலவாயு கிளம்பி ஆகாயத்துடன் மறுபடியும் கலந்துபோகிறது. இப்படி நஷ்டமடைந்த கரிப்பொருளை சூரிய பகவானுடைய பிரகாசத்தின் மகிமையால் பச்சிலை போர்த்த பல தாவரங்களும் ஆங்காங்கு வேலைசெய்து மறுபடியும் சேகரித்து வைத்துக் கொள்ளும்படி இயற்கையிலேயே அமைத்திருக்கிறார். இவ்வேற்பாட்டினுல் பிரபஞ்சத்திலுள்ள சக்திக்கு அழிவில்லாமல் அது மூலப்பிரகிருதியுடன் சம்பந்தப்பட்டு பல தொழில்களையும் இயற்றவும், ஜீவாத்மாவின் சரீர யாத்திரைக்கு அவசியமான சாதனமுண்டாகி யிருக்கிறது.

நம்மவர்கள் சூரியனே சக்தி; சூரியனே லோகோத்பத்திக்குக் காரணன்; சூரியனே பயிர்களுக்குத் தகப்பன்; சூரியனே ஜீவர்களுக்குப் பிராணதாரன்; சூரியனே மழையை உண்டாக்குகிற தாரகன்; சூரியனே காற்று வீசும்படி செய்கிற எஜமானன்: சூரியனே கடவுள் என்றிப்படி புகழ்வதற்குக் காரணம் இப்போது வெளியாகிறது. பிரபஞ்சத்திலுள்ள சக்தி முழுவதும் சூரியனுல் உதவப்பட்டதேயன்றி வேறல்ல. சூரிய வொளியில்லையானுல் பயிர்களில்லை. பயிர்களில்லையானுல் சகல ஜீவராசிகளுமில்லை. பாழ்நிலங்களும் பொட்டலும் மரம் செடி கொடி புல் பூண்டுகள் ஒன்றுமில்லாத கல்மலைகளும் பாறைகளுமே எங்கும் நிறைந்திருக்கும். ஆகையால் பிரபஞ்சத்தின் செல்வம் சூரியன் தந்த பாக்கியம். சூரிய ஒளியின் மகிமையால் பிரபஞ்சத்திலுள்ள சக்தியானது சக்கரஞ் சுழல்வதுபோலச் சுழன்றுகொண்டே யிருக்கிறது.

---

# வான்மீகரும், தென்னுடும்

## SRI VALMIKI AND SOUTH INDIA

(300-ம்—பக்கத் தொடர்ச்சி.)

அஃதாவது—" கவாடம் —பாண்ட்யானும் நகர த்வார கபாடம்'' பாண்டியரது நகரவாயிற் கதவு, என்பது தீர்த்தீயம்; 'யுக்தம் - புரப்ராகார கடிதம்'' நகரத்தெயிலோடு இணைக்கப்பட்ட, என்பது திலகம். இங்ஙனம், வடநாட்டாராய் விளங்கிய உரையாசிரியர் கருத்திவையாயினும், தென்னுட்டாராய் வான்மீகத்துக்குரையிட்ட கோவிந்தராஜர் முழுக்கருத்தும் ஈண்டு ஆராயத்தக்கது. அவர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

'ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணிவிபூஷிதம் |
யுக்தம் கவாடம் பாண்ட்யானாம் கதா த்ரக்ஷ்யத வானரா: ||
.....''

இதன் பொருள் பாண்ட்யானும்—பாண்டிய ராஜாக்களுடைய, யுக்தம்—யோக்யம், கவாடம்—இதனுல் நகரம் குறிக்கப் படுகிறது; முக்தாமணி விபூஷிதம் — முத்துமயமான மணிகளால் அலங்காரமாகிய, என்றது அது பிறக்குமிட மாதலால் (அங்கே அது மிகுந்துள்ளது) என்பது கருத்து.

இவ்வரும் பதவுரையால், ஸ்ரீ கோவிந்தராஜர் "முத்துமயமான மணிகளால் அலங்காரமானதும் பாண்டியர்க்கு யோக்ய மானதுமான பாண்டியரது கவாடபுரம்" என்பதே பொருள் என்று கருதினுராதல் காண்க. முற்கூறிய தீர்த்தீய திலக வியாக்கியானங்களினும், இவ்வியாக்கியானம் தமிழ் வழக்குகளைத் தழுவி மிகச் சிறந்து நிற்றல் தெளியப்படும்; என்னே? "கபாடபுரம்" என்பது பழங்காலத்

---

கடைத் தேங்காய் எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற்போல.

தே பாண்டிய ராஜதானியாய் இடைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ச்சி செய்துவந்த நகரம் என்பதும், இக்கபாடபுரச் சங்கத்தில் தொல்காப்பியம் செய்யப்பட்டதென்பதும், இச்சங்கமிருந்தார் ஐம்பத் தொன்பதின்மர் என்பதும் பிரசித்தமாதலால் என்க; இதனை, இறையனார் களவியற் பாயிரத்தில் "அவர் (இடைச்சங்கத்தார்) சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத் தென்ப" எனவும்; சிலப்பதிகாரம் உரைப் பாயிரத்தில் "இரண்டா மூழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திரீஇய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" எனவும்;

" இவ்வகை யரசிற் கவியரங் கேறினர்
ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப"

எனவும் * வருவனவற்றால் காண்க. திலக முதலிய வியாக்கியானங்களின்படி, கவாடமென்பது பாண்டியரது வாயிற் கதவெனக் கொண்டு, அதற்கேற்ப 'யுக்தம்' என்னும் சொல்லைநகரத்தரணோடு இணைக்கப்பட்ட என்னும் பொருள்படுத்திக் கவாடத்துடன் பொருத்தல் சிறவாமைகண்டு, அது பாண்டியரது நகரத்தையே குறித்ததாகல் வேண்டுமெனச் சுலோக வியல்பை யறிந்து கோவிந்தராஜர் எழுதிய குறிப்புப் புகழத்தக்கதாம். கபாடமென்னும் பெயர்கொண்ட பாண்டிய நகரமொன்றிருக்கும்போது, கதவென்னல் வேண்டா என்பது எளிதில் விளங்கத்தக்கதன்றோ? மேலும், நுணுக்கமான இடங்களிலெல்லாம் தேடிவரும்படி வானர வீரர்கள் ஏவப்பட்டிருக்க, ஈண்டுமட்டும், பாண்டியனது தங்கக் கதவைப் பார்த்துவிட்டு வரும்படி கூறப்பட்டதென்பது வான்மீகியின் கருத்தாகாதென்க. இனி, "முக்தாமணி விபூஷிதம்" என்னும் அடைக்கு, கோவிந்தராஜர், 'முத்தும் மணியு மிவற்றால் அலங்கரிக்கப்பட்ட, எனக் கதவுக்கேற்றிப் பொருள்கொள்ளாது, "முத்துமயமான மணிகளால் அலங்காரமாயுள்ள என்றது, அது பிறக்குமிடமாதலால் (அந்நகரத்தில் அது மிகுந்துள்ளது) என்றது கருத்து" என்று நகரத்திற்கேற்பக் கூறியதும், அவரது தமிழ் வழக்கினை யறிந்தெழுதும் உரைச் சிறப்பைக் குறிக்கின்றது. என்னை? கபாடபுரம் தாமிரபர்ணியின் சங்கமத் தயலில் உள்ளதாதலாலும், அந்நதி கடலுடன் கலக்குமிடத்துப் பிறக்கும் முத்து ஆணித்தரமானதென நூல்கள் கூறலாலும் என்க. இதனை "தலங்காவலன் றஞ்சைவாணன் முந்நீர் பொருந் தண்பொருந்தத் திலங்கார் வலவடம்" * என்னும் பொய்யாமொழியார் வாக்காலும், ஸ்ரீ காளிதாசரும், "ரகுமகாராஜருக்கு அப்பாண்டியர், தாமிரபர்ணி சமுத்திரத்தில் விழுமிடத்திலிருந்து எடுத்த நன்முத்துக்களை, தாங்கள் அவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்திருந்த புகழைக் கொடுப்பதுபோலக் கொடுத்தார்கள்" என, இரகுவமிசத்து (ஸர்க்கம்-4, சுலோகம், 50) கூறுதலாலும் அறியலாகும். இதனால் ஆணி முத்துக்களின் வளத்தால் அலங்காரமாயுள்ளது கபாடபுர மென்பதாயிற்று.

இங்ஙனம் "விண்ணகம் பரவுமேதகு கீர்த்திக் கண்ணகன் பரப்பிற் கபாடபுர"த்தை, தெய்வப்புலமை வான்மீகி முனிவர் சிறப்பித்துக் கூறியிருத்தல் போலவே, அவரால் வேறு தமிழ்நாட்டு முக்கிய பட்டணமும் கூறப்பட்டதுண்டோ எனின்; உண்டு. வானர வீரரிற் சிலரை சுக்கிரீவன் மேல் நாடுகளில் தேட விடுக்கும்போது அடியிற்கண்ட சுலோகம் சொல்லப்பட்டுள்ளது.

முரசீபத்தநம் சைவ ரம்யம் சைவ
ஜடீபுரம் | அவந்தீமங்கலோபாம் ச ததா
சாலக்ஷிதம் வநம் ||

(கிஷ்கிந் காண்டம், 42.ம், அத் 12-ம் சுலோகம்)

இச்சுலோகத்துக் கண்ட நகர முதலியவைகளில், முதலிற் குறித்த முரசீபத்தனம் என்பது அம்மேல் கடற்கரையிலுள்ள முசிரி என்னும் பட்டினமேயாதல் வேண்டும். இது, முற்

* சிலப்பதிகார உரைப்பாயிரத்தில், மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் காட்டியிருக்கும் பழைய அகவலொன்றைப் பார்க்க.

*" தஞ்சைவாணனது கடலை யெதிரும் தண்ணிய பொருநை யாற்றின்கண் பிறந்தொளிரும் முத்துக்கள் கோத்த வலிய வடம்" என்பது இதனுரை. (தஞ்சைவாணன் கோவை. பாடடு - 54.)

கட்டிக்கொண்டு வரச்சொன்னால் வெட்டிக்கொண்டு வருவான்.

காலத்தே, சுள்ளியென்ற பேரியாறு கடலுடன் கலக்கும் இடத்து விளங்கிய பெருந்துறை முகமாயும், சேரவரசர்க்கு முக்கிய பட்டணங்களில் ஒன்றாயும் இருந்ததென்றும், மேனாட்டு யவனரது மரக்கலங்கள் மிளகு முதலியன ஏற்றுதற்கு இதுவே அக்காலத்து ஏற்ற பட்டினமான தென்றும், மேற்றேயத்து யாத்திரைக் காரராகிய பிளினி, தாலமி முதலிய யவனாசிரியர் குறிப்புக்களால் விளங்குதலோடு, "சேரலர், சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினைமா ணன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங் கெழு முசிரி" என்னும் அகநானூற்று 149-ம் பாட்டாலும் தெளிவாகின்றது. சேரர்க்குரிய இப்பட்டினத்தைப் பழங்காலத்துப் பாண்டியனொருவன் வளைந்துகொண்டு பெரும் போர் புரிந்து, இதன்க ணிருந்த சேரரது படிமமொன்றைக்கவர்ந்து சென்றனன் (அகம். 149) இத்தகைய பட்டினம், மிகுந்த பழைமையும் மேல் கடற் பக்கத்ததாயும் இருந்தமையால் இதனையே வான்மீகி முனிவர் "முரசீபத்தனம்" என்றன ராதல் வேண்டும். முசிரி என்பதை வான்மீகி, முரசீ என்று ஒருபடியாகத் திரித்து வழங்க, பின்னையோ ராகிய வராக மிகிரர் பிரகத் ஸம்ஹிதையில், இதனை மரீசி பத்தனம் என வழங்கினர். மரீசி—மிளகு; மிளகின் வள மிகுதியைக் கொண்டிருந்தமையால் அப்பட்டினம் அவ்வாறு பெயர் பெற்றிருக்கலா மென்பது வராகமிகிரர் கருத்துப் போலும்.

இனி வான்மீகியார் வாக்கில், சோணாட்டு விசேடங் குறிக்கப்பட்டதுண்டோ எனின், அதுவும் உண்டு. அம்முனிவர், சோணாட்டின் தலைநகரைச் சுட்டாமற் போயினும், அத்தலைமை நகரமாகிய காவிரிப் பூம்பட்டினத்தின் பக்கத்துள்ள ஒரு பல விசேஷத்தைக் கூறுதல் மிகவும் கவனிக்கத்தக்கது. ஸ்ரீராமபிரான் விட்ட பாணத்தால், கரன் பூமியில் மாண்டு விழுந்ததைக் கூறும்போது, வால்மீகியார் அடியில் வருமாறு கூறுகிறார்.

ஸ பபாத கரோ பூமௌ தஹ்யமான:
சராக்நிநா | ருத்ரேணைவ விநிர்
தக்த: ச்வேதாரண்யே யதாந்தக: ||

இதன் பொருள் :—சுவேதாரண்யத்தில் ருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் வீழ்ந்தது போல, கரன் ஸ்ரீராமபிரானுடைய சராக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான்—என்பது. இவ்விடத்துக்கு உரையிட்ட தீர்த்தர் என்னும் ஆசிரியர் "சுவேதாரணிய மென்பது காவேரிநதி கடலுடன் கலக்கும் இடத்துள்ளது" என்றார். அஃதாவது இப்போதுள்ள திருவெண்காடு என்னும் சிவஸ்தலமேயாம்; காவேரிக் கரையிலுள்ள சுவேதாரண்யத்தில் அந்தகாசுரன் என்பவனைச் சிவபிரான் எரித்தது புராணப் பிரசித்த மென்பர் திலகர். மற்றும் இவ்வுரைகாரரே, சுவேதாரண்யத்தில் சிவபிரான் மார்க்கண்டேயர் உயிர்காத்தற் பொருட்டு யமனைக் கொன்ற சரிதம் நிகழ்ந்ததாக அத்தலமான்மியத் துண்மையால், வான்மீகி அதனைக் குறித்தனராகக் கொள்ளுதலும் அமையு மென்றனர். யமனையுதைத்த சரிதம் திருவெண்காட்டுக் கடுத்த திருக்கடவூரில் நிகழ்ந்த தென்பது பிரசித்தமாயினும் அவ்விரு தலமும் சுவேதாரணியம் என்ற ஓரே பிரதேசத்தைச் சார்ந்தனவாக முன்பு கருதப்பட்டுச் சரித்திர வொற்றுமை பெற்றன வென்று கொள்ளுதல் குற்றமாகாது. திருக்கடவூர் போலவே, திருவெண்காட்டிலும் யமனை யுதைத்தசெய்தி நிகழ்ந்த தென்பதற்கு, சம்பந்த மூர்த்திகள் தேவாரத்தில், [கீழ்

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்
[றன்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநான் மறையவன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே.

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்து மாணிக்காய்
ஆள்வித் தமர ருலக மளிப்பா னூர்போலும்
வேள்விப் புகையால் வான மிருள்கூர் வெண்காடே

என்ற பாசுரங்களில் அச்சரிதம் திருவெண்காட்டுக் குரியதாகவும் கூறப்படுதலே தக்க சான்றாகின்றது. இப்போதுள்ள புராணத்தில் இச்சரித்திரம் காணுமற் போயினும் பழைய புராண மிவ்வாறிருந்த தென்பதே கொள்ளத் தக்கது. இவற்றால், வான்மீகிபகவான், தமிழகத்தே சோணாட்டின் முக்கிய விசேடமொன்றைக் குறிப்பிட்டு செல்லுதலும் காண்க.

கட்டி வழிவிட்டால், வெட்டி அரசு ஆளலாம்.

இவற்றால், தமிழ் நாட்டுத் தலைமை நகரங்கள் பலவும் வான்மீகி முனிவரால் நன்கறியப்பட்டிருந்தன என்பது எளிதல் விளங்கத் தக்கது. நகரங்கள் மட்டுமேல்ல; தமிழ் மக்களது வழக்க ஒழுக்கங்கள் சிலவும் அம்முனிவர்க்குத் தெரிந்திருந்தன வென்றே சொல்லலாம். அயோத்தியா காண்டம், 93-ம் ஸர்க்கத்தில் அம்முனிவர் பரதன் கூற்றாக அடியில் வருமாறு கூறுகிறார்.

கைவபுநி கைவலைாவீலாது ஶிரஷூை
வலைாஹீ நீ:| ஜெவப்ரகாமெஶ: ஹது
ஜெகஷிணாதாா யமா நாா:

இதன் பொருள்:—நம் யுத்த வீரர்கள் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன் தென்னாட்டாரைப்போல் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர் என்பது.

தமிழரசர் போர்க்குச் செல்லும்போது அதற்கென்று ஒருவகைப் பூவும், தங்குலத்திற்கென்று ஓர் அடையாளப் பூவுமாக இருவகைப் பூவுடையரென்பது பழைய தமிழ் நூல்களால் அறியப்படும். அன்றியும் நிரை கவர்தல் நிரைமீட்சி முதலாக நிகழும் போர்த்தொழில்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பூச்சூடிச் செல்லுதலும் மரபாம். இப்பூப் பற்றியே வெட்சி காந்தை உழிஞை வஞ்சி என அப்போர்த் துறைகள் பெயர் பெறுதலுங் காண்க. இவ்வாறே அகப்பொருட் டுறைகளாகிய புணர்தல் பிரிதல் முதலியனவும் குறிஞ்சி பாலை என அவ்வந்நிலத்துக்கேற்ற பூப்பெயரானே வழங்கப்படும். இவற்றால் தென்னாட்டார் பூவணிவதிற் கொண்டுள்ள பெரு விருப்பம் வெளியாம். இதனையே, மஹரிஷி "நம் யுத்த வீரர், தென்னாட்டாரைப்போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்" என்று கூறிச் சென்றனரெனக் கொள்க. தென்னாட்டாரைப்போல வேறெந்நாட்டாரும் பூவை மகிழ்ந்தணிதல் இன்றும் வேறெங்கும் காணக்கிடையாதெனபதும் அறியத்தக்கது.

இன்னும், தென்னாட்டு அரக்கர் செய்கைகளில் அவரிறந்தால் எரிக்கப்படாது புதைக்கப்படுதல் ஒன்றென்று தெரிகிறது; விராதன் என்ற அரக்கன் சாகுந்தருணத்தில் இராமலக்ஷ்மணர்களை நோக்கி "என்னைக் குழியில் அடக்கஞ் செய்துவிட்டு க்ஷேமமாகப் போங்கள்; இறந்துவிட்ட அரக்கரை அடக்கஞ் செய்தலே பழமையான தர்மம்" என்று கேட்டுக் கொண்டதாக ஆரணிய காண்டம் 4-ம் சருக்கத்தில் வான்மீகி கூறுகின்றார். இது பழந் தமிழர் கொண்ட முறைமை என்பது, மணிமேகலை, சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை முதலியவற்றை நோக்குவார்க்கு விளங்கும். இனி, வாதாபி இல்வலர் கதையை இராமபிரான் தம்பிளவலுக்கு எடுத்துரைக்குமிடத்தே, இல்வலன் பிராமண வேடந்தரித்துத் தம்மவர்க்குரிய தல்லாத ஸம்ஸ்கிருத பாஷையைப் பேசிக்கொண்டு வந்ததாகக் கூறுவதால், அரக்கர்க்கு வடமொழி அந்நியபாஷையாயிருந்தது என்பதும் விளங்கும். அன்றியும், ஆரணிய காண்டத்தில் மாரீசன் இராமனது பெருமையை இராவணனுக்கு எடுத்துரைக்கும்போது "இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால், ரகாரத்தில் தொடங்கும் 'ரத்னம்' 'ரதம்' என்ற பெயர்கள்கூட எனக்குப் பெரும் பயத்தை உண்டாக்குகின்றன" என்றதாக வான்மீகி கூறுகின்றார். இவ்விடத்தில் ரகாரத்துக்குச் சிறப்பாக விதிக்கப்பட்ட 'இப'ச்சாரியையிட்டு 'ரேபாதி நீ' எனக் கூறாது, 'ரகாராதி நீ' என முனிவர் கூறியிருத்தலை, தென்னாட்டானை மாரீசன் கூற்றுக்கேற்ப வைத்த தமிழ் வழக்கு—என்று கூறுவாரும் உண்டு. தமிழர் 'ரகாரம்' எனக் 'கார'ச்சாரியையிட்டே வழங்குவர்.

இனி, தலைச்சங்கத்தவரில் வான்மீகனாரெனப் பெயர்கொண்ட புலவரொருவருளரென்பது, தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியலில் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலால் தெரியவருகிறது. இவ்வான்மீகனார் பாட்டொன்று புறநானூற்றில் (358) வருவது அடியில் வருமாறு:-

"பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒரு பகலெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவ் வனைத்து மாற்றா தாகலிற்
கை விட்டனரே காதலா; அதனால்,
விட்டோரை விடாஅள் திருவே;
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே"

இப்பாட்டு, தவத்தின் பெருமையே மிக அழகாகச் சிறப்பித்து நிற்பது காண்க.

கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லுவார் பலர்.

இதனை நோக்கும்போது, "தபஸ்வாத்யாய நிரதம்" என்று தம்மிராமாயணத்தைத் தொடங்கிய மகருஷி வான்மீகி பகவான் தலைச்சங்கத்தை அறிந்திருந்தவர்தாமோ? என்ற ஐயம் உண்டாதல் இயல்பேயாம். இதற்கிணைய, திரேதா யுகத்தில் வான்மீகியிருந்ததாகக் கூறும் கர்ணபரம்பரையும், இரண்டாமூழியிற் கபாடபுரமிருந்ததாகத் தமிழ் நூல்கள் கூறுவதும் ஒருவாறு ஒற்றுமையும் பெற்றதாயிருக்கிறது, (இரண்டாம் ஊழி-திரேதா யுகம்) அன்றியும், வான்மீகி முனிவர், தம் ஆதி நிலையில் ஆரியரின் வேறாய வேடர் கூட்டத்துடன் சேர்ந்து கொடுந்தொழில் செய்து வந்து, பின் மகருஷியானதாகக் கூறப்படும் சரித்திரம், இவர் இத்தேசத்துப் பூர்வகுடிகளுடன் சம்பந்தமுடையராயிருந்ததைக் காட்டுமென்றும், தமிழ்மொழி அப்பூர்வகுடிகள் வழங்கிய பாஷைகளிற் சிறந்ததாயிருந்ததென்றும், வால்மீகியார் வசித்த பிரதேசத்தில் தமிழ் முற்காலத்து வழங்கியிருந்ததென்பதற்கு இப்போதும் அநேக சான்றுகளுண்டென்றும், பிறவுஞ் சில ஏதுக்கள் கூறுவாருமுளர். இங்ஙனம் வால்மீகியார் தமிழருடன் சம்பந்தமுடையவராகக் கூறப்படுவதற்கு, வேறு நிச்சயமான ஆதாரங் காணப்படாமையால், அது முழவுபடுத்தத் தக்கதன்று.

---

# யுத்தம் ஒழிய வழியுண்டா?

## COULD WE AVOID WAR?

சற்றேறக்குறைய ஐந்து வருஷகாலமாய் ஐரோப்பா கண்டத்தில் நடந்துவந்த மகாயுத்தம் சில மாதங்களுக்குமுன் நிறுத்தப்பட்டது. இப்போரின் கொடுமைகளும், இதனாலுண்டான உயிர்ச் சேதமும் தனவிரயமும் கணக்கற்றவை. அநேக நகரங்கள் நாசமாக்கப்பட்டன. புராதனமான கட்டிடங்களெல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன. ஆயினும், சத்தியமே ஜயமென்ற பெரியோர் மொழிக்கிணங்க, ஜர்மனியின் ஏகாதிபதியாய் இருந்து வந்த கெய்ஸரின் குடிகள், பேராவலாலும் அஹங்காரத்தாலும் தூண்டப்பட்டுச் செய்த அதர்ம யுத்தத்தில் அவர்கள் ஆரம்பத்தில் வெற்றியடைந்தனராயினும், முடிவில் நேசப்படைகள், விடாமுயற்சியினாலும், தாங்கள் செய்வது தர்மகாரியமென்ற பூர்ண நம்பிக்கையினாலும் ஈசுவர கடாக்ஷத்தினாலும் ஜயமடைந்து தர்ம ஸம்ஸ்தாபனஞ் செய்தனர். இப்பொழுது பிரான்ஸ் தேசத்தில் வார்ஸேல்ஸ் என்னும் நகரில் சமாதான உடன்படிக்கைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு ஓராலோசனைச் சங்கம் கூடியிருக்கிறது. அதில் அமெரிக்கா நாட்டின் தலைவரான **வில்ஸன்** என்பவர் இனி இப்பூவுலகில் மன்னர்கட்குள் யுத்தம் நீங்கி எக்காலத்திலும், எவ்விடத்திலும் தீக்குண மொழிந்து, நற்குணமோங்கி தர்மம் நிலைநிற்கும் பொருட்டு "லீக் ஆப் நேஷன்ஸ்" அல்லது ஜாதிய மஹா சங்கம் என்ற ஓர் கூட்டுறவை ஏற்படுத்தி, அதனுதவியால் மன்னர்கட்குள் நீண்ட சமாதானத்தை யுண்டாக்க முயன்று வருகிறார். அவ்வேற்பாட்டின்படி இப்பொழுது முடிவுற்ற யுத்தத்திற்குப் பிறகு இவ்வுலகில் இனி யுத்தம் ஒழிந்துவிடு மென்பது அவரது திடமான நம்பிக்கை. ஆனதுபற்றியே அவர் இந்த யுத்தத்தை யுத்தமொழிக்கும் யுத்த மென்றார்.

இவ்வாறு யுத்தத்தை யொழிக்கக் கூடுமா? இனி, எந்நாட்டிலும் எக்காலத்திலும் மன்னர்கள் பொறாமை, பேராவல் முதலிய கொடிய தீக்குணங்களை விட்டு சன்மார்க்கத்தையே வழிபட்டு ஒருவருக் கொருவர் நல்லுறவுடனிருப்பார்களா?

இக்கேள்விக்கு விடையளிக்குமுன் எக்காலத்திலேனும் யுத்தம் நடை பெறாமலிருந்திருக்கிறதா வென்றும், யுத்தத்திற்குக் காரணங்களெவை யென்றும் சற்று ஆராய்வோம். இவ்வாறு யுத்தமின்றி இருந்த காலம் மிக வரிது. அநேக காலங்களில ஏதாவதொரு நாட்டில் யுத்தம் நடைபெற்றே வந்தது. சிற்றரசர்கட்குள் சச்சரவினாலோ, அன்றி குடிகளின் கலகத்தாலோ, அல்லது அந்நிய மன்னன் படை யெடுத்தலாலோ, ஏதாவதொரு காரணத்தின் பொருட்டு யுத்தம் நடந்து வந்தது. ஆனதுபற்றி யுத்தமில்லாத நாள் கிடையா தென்பது திண்ணம். ஒவ்வொரு சமயத்திலும் யுத்தம் நடந்து சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு, திரும்பவும் யுத்தம் துவக்க

---

மாகு முன் ஓரோய்வுண்டாக, அக்காலத்தில் சமாதான மிருந்ததேயன்றி நீடித்த வமைதி ஒரு பொழுது மிருந்ததில்லை.

இவ்வண்ணம் சண்டையிடுவது மன்னர்கள் மட்டுமல்ல; சாதாரண ஜனங்களுக்குள்ளும் அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளுமுண்டாவதை நாம் தினந்தோறும் காண்கிறோம். நகமும் சதையும்போ லிணங்கி மனமொத்து வாழ்ந்து வரும் நண்பர்கள் ஒரு நொடியில் பிரிவது ஸகஜம். ஒரே வயிற்றில் பிறந்து மிக வாத்ஸல்யத்துடனிருந்து வந்த சஹோதரர்கள் சண்டை யிடுகின்றனர். பிள்ளை மனங் கல் பெற்றமனம் பித்தென்ற முதுமொழிக்கிணங்க, பெற்றோரை எதிர்த்து மனம் போன போக்கே சென்று தங்கள் ஜீவாதாரமாயிருக்கும் தாய்தகப்பன்மார் மனம் நோக நடக்கும் மக்க ளநேகர். நெருங்கிய உறவும் நீடித்த நேசமும் வெகு சீக்கிரம் பறந்து போகின்றன. இதற்கெல்லாம் காரணமென்ன?

கடவுளின் எண்ணிறந்த சிருஷ்டிகட்குள் மானிடப் பிறப்பே மிக்க மேம்பட்டதென்றும், அது ஜன்மாந்தரங்களில் செய்த புண்ய வசத்தால் கிடைக்குமேயன்றிச் சுலபமாய் கிட்டாதென்றும் அடிக்கடி பெரியோர் கூறக் கேட்டிருக்கிறோம். அன்றியும், நவீன தத்வசாஸ்திரிகள் சரீரவமைப்பையும் மனோநிலைமையையும் ஆராயுங்கால் மனிதனே மற்ற ஜீவன்களைவிட மேலானவ னெனச் சொல்லுகின்றனர். இவ்வாறு மனிதன் இவ்வளவு கௌவரவம் படைத்தவனாயின், சர்வவல்லவராய், சர்வ சத்குண பரிபூரணரா யிருக்கும் சர்வேசுவரனின் நிகரற்ற சிருஷ்டியென்ற பெயர்மனிதனுக்குரியதேயாயின், அதற்குப் பாத்திரனாக அவன் காணப்படவில்லை. ஏனெனில், கடவுள் சச்சிதானந்த ஸ்வரூபியாய், கருணைக் கடலாய், சாந்தமூர்த்தியாய் இருக்கிறாரென்பது உண்மையாயின், அவரது உயர்ந்த சிருஷ்டிக்கும் அக்குணாதிசயங்களிற் சில கொஞ்சமேனும் பொருந்தியிருக்க வேண்டுமல்லவா? அவ்வாறின்றி மனிதர்களுக்கு, சாந்தம் தயை, பொறுமை முதலிய நற்குணங்கள் விசேஷமாயில்லாமல் ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டையிடுவானேன்?

இதற்குக் காரணமென்னவென்று ஆராயுங்கால், அது மனிதனின் மனோவமைப்பெனப் புலப்படும். சாதாரணமாக எல்லா மனிதர்களும், சாத்வீகம், ராஜஸம், தாமஸமென்ற முக்குணங்கள் பொருந்தியவர்கள். சாத்வீகமென்பது, சாந்தம், அமைதி, நல்லறிவு, விவேகம் முதலிய நற்குணங்களின் சேர்க்கையாம். அது சன்மார்க்கத்திலேயே பிரவிருத்திக்கும்படி தூண்டுமோர் குணாதிசயம். ராஜஸமோவெனில், துராக்கிரகம், அஹம்பாவம், குரூரம் முதலிய தீக்குணங்களின் சேர்க்கை. அது துர் நடத்தைக்கும் துரெண்ணத்திற்கும் காரணமாயுள்ளது. தாமஸமென்பது, அறிவின்மை, அவிவேகம், ஜடத்வம், மந்த புத்தி முதலிய குணங்களின் கூட்டம். தாமஸீகனாயிருக்கும் ஒரு மனிதனிடத்தில் காமக் குரோத லோபமோக மதமாச்சரியமென்னும் துக்கத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கும் குணங்கள் குடிகொண்டிருக்கும். இவ்வகையான முக்குணங்களும் பொருந்தியிருப்பது மனிதனின் இயற்கை. இத்தகைய மனிதனுக்குச் சண்டை யிடுந்தன்மை எப்பொழுது வருமெனில், சாத்வீக குணங் குறைந்து ராஜஸமதிகமாக, மோகாதி தீக்குணங்களின் வலையி லகப்பட்டு, கோபாவேசத்தில் தர்மாதர்ம விவேகமின்றி மூர்க்கத்தனமாய் நடக்குங்கால், அவனை எவரேனும் அக்கொடிய மார்க்கத்திலிருந்து திருப்ப எண்ணங்கொண்டு எதிர்ப்பாரானால், அக்காலத்தில் சண்டையுண்டாகும். இவ்வாறு சாத்வீகம் தழைந்து, ராஜஸமும் தாமஸமும் ஓங்குங்கால் விவேகமின்றி துர்மார்க்கத்தில் செல்லும் மனிதனையெதிர்த்தால், அவன் கோபங்கொண்டு சண்டையிடுவான்.

இதனுண்மை மானவீக சாஸ்திரத்தை ஆராயுங்கால் நன்கு புலப்படும். அத்தத்வ சாஸ்திரிகள் சண்டை யிடுவதோர் இயற்கைக் குணமென்பர். இக்குணம் மனிதனுக்கும், அவனுக்குக் கீழ்வரிசையி லிருக்கும் ஜீவராசிகளுக்கும் பொதுவாகக் காணப்படுகிறது. இவ்வாறு சண்டையிடுவது தர்மம், அதர்மமென இருவகைப்பட்டது. அங்கியன் எதிர்க்குங்கால் ஆத்ம ரக்ஷணத்தின் பொருட்டுச் செய்யும் சண்டை தர்மமானது. வீணைப் பொறாமையாலும், பேராவலாலும் தூண்டப்பட்டு மற்றொருவனை எதிர்த்துச் செய்யும் சண்

டையே அகர்மமானது. ஆத்ம ரக்ஷணத்திற்கு மட்டுமே சண்டையிடுந்தன்மை எல்லா ஜீவன்களுக்கு முள்ள இயற்கைக் குணம். ஆனால், இதற் கெதிராகக் கூறப்பட்ட அதர்மமாய் சண்டையிடுந் தன்மை சில ஜந்துக்களுக்கு மட்டுமே உரியது. இத்தன்மை முக்கியமாய் கொடிய விலங்குகளிடத்தில் காணப்படும். இதற்குக் காரணமென்னவெனில் இத்தன்மையுள்ள ஜந்துக்களுக்குப் பேராசையும், கண்டதைக் கைப்பற்ற ஓரவாவும் பெரும்பாலுமிருக்கும். பேராசையினால் தூண்டப்பட்டு, எதையும் கைப்பற்ற முயலுங்கால், அம்முயற்சிக்குச் சிறிதேனும் இடையூறேற்பட்டால், கோபமூண்டு ஆக்ரோஷத்துடன் சண்டையுண்டாகிறது. கண்டதைக் கைப்பற்ற வுண்டாகும் பேராசையும், அவ்வெண்ணம் நிறைவேராவிடி லுண்டாகும் கோபாவேசமும், ராஜஸகுணத்தி னடையாளங்களாகையால், எங்கெங்கு சாத்வீகந் தழைந்து, ராஜஸம் ஓங்குகிறதோ அங்கெல்லாம் சண்டையுண்டாகுமென்பது திண்ணம். இத்தன்மை புலி கரடி முதலிய கொடிய விலங்குகளுக்கு மட்டும் உரியதல்ல. மனிதர்களில் பெரும்பான்மை யோரிடத்திலும் இத்தன்மையைக் காணலாம். மிருகங்களைவிட மனிதனுக்கு விவேகமும், புத்தியுமதிகமானதால், தன் ஆத்ம திருப்திக்குச் சாதகமாயிருக்கும் விஷயங்களை நன்கறிந்து, அவ்விஷயங்களில் ஓரதிகமான ஆவலினால் அவை பிறருக் குரியவை யென்றாவது, அவைகளையடைய முயலுவது அதர்மம், அதனால் மற்றோர்க்கும், முடிவில் தனக்கும் தீங்கே விளையுமென்றாவது கொஞ்சமேனும் கவனியாமல் அவன் மூர்க்கத்தனத்துடன் சண்டையிடுவான்.

இத்தன்மை பிரதி மனிதர்கட்குமட்டுமன்றி, ஜன சமுதாயத்திற்கு முரியது. ஓர் ஜன சமுதாயத்திற்கு முக்குணங்களில் சாத்வீகம் அதிகமாயிருந்து, ராஜஸமும் தாமஸமும் குறைந்திருக்குமேயாயின், மோகம், பேராசை, மமதை முதலிய துர்க்குணங்களும், உரிமையின்றி அந்நிய நாட்டில் பிரவேசித்தல், படையெடுத்தலாகிய அடாத செய்கைகளும் காணப்பட மாட்டா. அவ்வாறின்றி ஒரு ராஜ்யத்தின் மன்னனுக்கும் அவன் ஆள்கைக்குட்பட்டுள்ள குடிகளுக்கும் ராஜஸ குண மதிகரித்தால், அவர்கள் பேராவலாலும், துராக்கிரகத்தாலும் தூண்டப்பட்டு, ஒரு பாவமுமறியாச் சிற்றரசர்களின்மேல், அவர்கள் யுத்த சந்நத்தர்களாய் இல்லாதிருக்குந் தருணத்தில், படையெடுத்து அவர்களை ஜயித்து, அவர்கள் நாட்டையும் கைப்பற்ற முயலுவர். இத்தகைய மன்னர்கள் கொடுங்கோல் செலுத்துவோர்களாயும், குரூர குணமுள்ளவர்களாயும் தர்ம விவேகமின்றி, அடாது செய்ய வஞ்சா நெஞ்சத்தினராயு மிருப்பர். இதற்கு உதாரணம் சின்னாட்களுக்கு முன் ஜர்மனி தேசத்து ஏகாதிபதியா யிருந்த கெய்ஸரே. இம்மன்னன் போலும், அவன் மனதையொத்த குடிகள் போலும் சிலர் இவ்வுலக விருப்பரேயாயின், யுத்த மொழிய வழி தேடுவது குதிரைக்கொம்பை காணச்செல்வதையொக்கும்.

சாதாரணமாக மனிதர்களுக்கு எந்தெந்த சமயங்களில் கடமையும் இச்சையும் வேறுபட்டிருக்கின்றனவோ, அப்பொழுதெல்லாம் மனதிலோர் தாபமும், நிம்மதி யின்மையும் உண்டாகின்றன. எப்பொழுதும், நல்வழிபட்டு நற்குணங்களை மேற்கொண்டு சாத்வீகத் தன்மையோடிருப்பது மிகவும் கடினமானதாகையாலும், தீயவழியிற் சென்று, தீய தொழில்களைக் கைக் கொண்டுவருவது மிக்க எளிதாகையாலும், மனோதிடமில்லாத பேதை மனிதர்கள் பெரும்பாலும் செய்யவேண்டிய கருமத்தைக் கவனியாது தங்கள் விருப்பம்போல் நடக்க முயலுவர். அவ்வாறு நடக்குங்கால் எவரேனும் எதிர்த்து அவர்களை நல்வழிப்படுத்த முயன்றால், அவர்களது நல்லெண்ணத்தை மதியாமல், தங்களுக்கு அவர்கள் பகைவரெனக் கருதி, அவருடன் சண்டையிடத்தலைப்படுவர். உலகத்தில் நல்லானைப் பொல்லான் எதிர்த்தால், அவனுடன் சண்டையிடாது, அச்சமயத்தில் சாந்தத்துடனும், பொறுமையுடனும் கஷ்டங்களனைத்தையும் சஹித்து, முடிவில் தர்மம் தலைகாக்குமென நம்பியிருப்பது நல்லோரது வழக்கம். ஆனால் கொடியவர்களை நல் வழிப்படுத்தவெண்ணி, அவர்களத்தீயவழியிற் செல்லாவண்ணம் நெறியுடையோர் தடுப்பரேயாயின், அக்கொடியர் ஸர்ப்பம்போல் சீறி அடாது செய்து தங்களுக்

குப் புத்திமதி கூறவந்தோரைத் துன்புறுத்த வஞ்சார்.

இதுவே சாதாரண மனிதர்கட்குள் சண்டைக்குக் காரணம். இதுவே ஒரு ராஜ்யத்து மன்னனும், அவனது குடிகளும், அந்நிய நாட்டின்மேல் படையெடுத்துச் செல்வதற்கும் காரணம். மனிதர்களொருவருக்கொருவர் சண்டையிடுவதும், அரசர்களுக்குள் போர் மூளுவதும் ஒழியவேண்டுமேயாயின், தாமஸமும் ராஜஸமுமொழிந்து, சாத்வீகம் மேலிட்டு மனிதர்களில் பெரும்பான்மையோர் நல்வழிப்பட்டாலொழிய அவ்வெண்ணம் வீணாகுமென்பது நிச்சயம். யுத்தமொழிய வேண்டுமாயின், ராஜஸ குணமொழியவேண்டும். மனிதர்களெல்லோரும் சாத்வீகர்களாக முற்றிலும் மாறவேண்டும். பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிகளனைத்தும் ஈச்வரத்தன்மையையும், குணசம்பத்தையும் மேன்மேலுமடையமுயலுவனவாயிருத்தலாலும், மனிதன், மற்ற பிராணிகளைவிட குணசம்பத்தை யதிகமாயுடையவனாயிருத்தலாலும் மனிதன் தனது சாத்வீகத்தன்மையொழிந்து தாழ்வடைந்து தாமஸீகனாய் மாறுவது முடியாதாயினும், எல்லோரும் சாத்வீகர்களாய் மேம்பட்டு நல்வழிப்பட முயன்றாலன்றி யுத்தமொரு நாளும் ஒழியாது.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையென்ற மூன்றுமின்றி, மனிதர்கள் ஒருவருக்கொருவர் பொறாமையும் லோபமுங் கொள்ளாமல் எல்லோரையும் சஹோதரர்களெனக் கருதுவதுமன்றி, எல்லா ஜீவராசிகளும் ஈசுவர ஸ்வரூபமென்றும், ஒரே ஆத்மா எல்லாவற்றிற்குள்ளும் குடிகொண்டிருக்கிறதென்றும் "தத்வமஸி" யென்ற மஹா வாக்யத்தின் பொருளாகிய ஜீவாத்ம பரமாத்ம ஐக்யத்தை நன்குணர்ந்து, பிறர்க்கு விளையுந் தீங்கு தனக்கெனக் கருதி, "அஹிம்ஸா பரமோதர்ம:" என்றபடி ஒருவருக்கொருவர் பொல்லாங்கு செய்யமனந் துணியாமல் மனிதர்களனைவரும் நல்வழிப்பட்டாலன்றி, இனி யுத்தமொழிந்து நீடித்த வமைதியுண்டாகுமென வெண்ணுவது வீணே. தற்காலத்தில் ஐரோப்பியர்களும், அமெரிக்கா தேசத்தார்களும் புகழ்ந்துகொள்ளும் நாகரீகத்தின் சிறப்பென்னவெனில் தேகசுகங்களைத் தேடி, பூவுலகப் பற்றை யதிகரித்து, கர்மவிலங்குகளில் மேன்மேலுமகப்பட்டு, மோகம், பேராவல், பொறாமை முதலிய, நீமுன், நான்முன் என்ற போட்டிக்கனுகுணமாயுள்ள வியாபாரியின் லக்ஷணங்களில் தேர்ந்து சுகித்து வாழ்வதேயாம். இக்குணங்களில் ஒன்றேனும் சாத்வீகமானதல்ல. ஐரோப்பிய தேசத்துக் குடிகளுக்கு இக்குணங்கள் பூரணமாய் நிறைந்திருந்து அவைகளில் அவர்களோர் பெருமை பாராட்டுங்கால், சஹோதரபாவமும் எல்லோரிடத்தும் அன்பும் தயையும் அவர்கட்குண்டாகமாட்டா. இத்தகைய மனிதர்களுக்கு, ஓர் கடும்போர் முடிந்தபிறகு, அதன் கொடுமைகளைத் தாங்காமல், இனி யுத்தமொழியமேண்டும், நீடித்த வமைதியைத்தேட வேண்டுமென்ற அவா சின்னாட்களுக்கிருக்குமேயன்றி எக்காலத்திலும் அது நிலை நிற்பதில்லை. மறுபடியும் தாமஸ குணங்களும், ராஜஸ குணங்களும் அதிகரிக்க, சாத்வீகம் தழைந்து யுத்தம் துவக்கமாவது நிச்சயம். மன்னர் மஹா சபையாயினும், பூவுலகத்தையெல்லாம் ஒரு குடைக்கீழாளும் ஏகசக்ரவர்த்தியாயினும், நற்குணங்களை ஒருவனுக்கு ஊட்ட முடியாது. ஜனங்களெல்லோரும் தாங்களே சன்மார்க்கத்தின் பெருமையையறிந்து, ஒருவரையொருவர் பகைப்பது தீதெனக்கண்டு சாத்வீகர்களாய் இருந்துவர முயன்றாலன்றி யுத்தம் ஒருநாளும் ஒழியாதென்பது திண்ணம்.

---

“சேத்தபாம்பை யடிப்பது எளிது.’—உலகத்தில் பலர் ஒருவனை நிந்தித்தால் வலியற்ற பலஹீனனும் அவனை நிந்திக்கத்தொடங்குகிறான். நாலுபேர்கள் சேர்ந்து ஒரு திருடனைப் பிடித்தால் வழியேபோகிற ஒவ்வொருவனும் அவனையடிக்கத் துணிகிறான். ஆரம்பத்தில் திருடனைப் பிடித்து கட்டியுருட்டியவன் வீரனேயன்றி, பின்னர் ஒருவனை விளாசும் வீணர்கள் வீரர்களல்லர். அதுபோல் எந்தக் காரியத்தையும் புதிதாய் கண்டுபிடித்துச் செய்பவன் புத்சாலியேயன்றி அவனைப் பின்பற்றும் மற்றவர்கள் புத்திசாலிகளாகார். ஆகிலுங் கல்வி விஷயத்தில் பெரியோர்களைப் பின்பற்றுவது குற்றமாகாது. சிஷ்யனது பிரஸங்கத்தால் குருவின் பெருமை புலப்படுகின்றதன்றோ?

---

கட்டு அறிந்த காயும் அல்ல, கனம் அறிந்த கப்பரையும் அல்ல.

# வஸந்த மந்திரம்

(319-ம் பக்கத் தொடர்ச்சி.)

## மூன்றாவது அத்தியாயம்

### இராஜ ஸபை

வழக்கம்போல் அரண்மனைக்குப் போக அனந்தபட்டர் பிரயத்தனம் செய்கின்றார். ஆனால் சில நாட்களாய் அவர் அரண்மனைக்குப் போகும்பொழுது மனப்பூர்த்தியாய்ச் சந்தோஷத்துடன் போவதாகத் தோற்றவில்லை. ஆயினும் போகாமல் விடுவதென்றால் அவரைப்போன்ற பெரிய உத்தியோகஸ்தர்களுக்குச் சாத்தியமா? வீதியில் குதிரை தயாராய் நிற்கின்றது. உத்தியோக லக்ஷணத்துக்குரிய பதக்கங்கள் முதலிய சின்னங்களை மேற்கொண்ட பின்னர், கையில் வெள்ளிப்பூணிட்ட தடியைத் தாங்கி, காலில் பாதரக்ஷை அணிந்து கொண்டார். அவ்வளவில் ஒரு பிராமணச் சிறுவன் பக்கத்தறையிலிருந்து வெளிவந்து விலையுயர்ந்த ஒரு காஸ்மீர் சால்வையை அவர்மேல் போர்த்தினான். இத்தனை அலங்காரங்களோடு அனந்தர் வெளியே வந்து குதிரைமேல் ஏறுவதற்காக ஜேணத்தைக் கைக்கொண்டார். வீதித் திண்ணையில் பல்லி நச்சுக் கொட்டிற்று. 'ஏறலாமா, வேண்டாமா' என்று ஒரு கொடி நேரம் யோசனை செய்தார். மனத்தைத் தேற்றிக்கொண்டு குதிரை யேறிச் செல்லவே, எதிரில் ஒரு வேடன் முயல்களைக் கொன்று ஒரு மூங்கிலில் தோரணமாய்க் கட்டிக்கொண்டு வந்தான்.

இதைக் கண்டதும் அனந்தபட்டருக்கு மனம் கலங்கி விட்டது. இன்று என்ன விபரீதம் விளையுமோ இராஜ ஸபையில் என்று நடுங்கினர். பின் வருவது நன்றென்று தோன்றவில்லை. அரண்மனையின் அருகில் வருவதற்குள்ளாகவே வாசலில் நின்ற சேவகன் உள்ளே ஓடிப்போய் ஆமத்பாக்ஷாவின் உத்தரவு பெற்று அவரண்டை வந்து நின்றான். அவர் குதிரையை விட்டிறங்கியதும் "சுவாமீ, உள்ளே தாங்கள் உடனே வரும்படி உத்தரவாய் இருக்கின்றது" என்றான். அனந்தபட்டர் மனத்துள் "உத்தரவில்லாமல் என்ன! நான் உதயபுரியிலிருந்து வந்தது முதல் தினமும் இப்படித்தான். ஐயோ! காமுகர் உலகத்தை மறந்து விடுகிறார்களே! இந்த சுல்தான் படும் அவசரத்திற்கு நான் இன்று எங்ஙனம் ஸமாதானம் சொல்லப் போகிறேன்!" என்று விசாரப்பட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

வழக்கம்போல் ஸபாமண்டபத்தில் சுல்தான் சிம்மாஸனத்தில் வீற்றிருக்கின்றான். இப்பொழுது ஆமத்பாக்ஷாவை அடையாளம் கண்டு பிடிப்பதுகூட, வருத்தமாய் இருக்கின்றது; அவ்வளவு தூரம் இளைத்துப்போய் விட்டான். பாபம்! சுற்றிலும் 4, 5 சபையோர் மட்டுமே உட்கார்ந் திருக்கின்றனர். அனந்தபட்டர் உள்ளே நுழைந்து அரசனை வழக்கம்போல் மரியாதை செய்தவுடன், சுல்தான் வாடின முகத்துடன், தாழ்ந்த குரலோடு "வாரும் ஐயா, இப்படி உட்காரும் ஆஸனத்தில்" என்று பக்கத்தில் ஒரு ஆஸனத்தைக் காட்டினான்.

சற்று நேரம் அனைவரும் மௌனம். பாக்ஷா "ஐயா! அனந்தபட்டரே! நீர் உதயபுரி போய் வந்து இன்று 15 நாள் வரையில் ஆய் விட்டனவே. இன்னும் முகூர்த்த சமாசாரம் ஒன்றையும் காணோமே! அந்த ராஜன் நம்மை ஏமாற்றி விடுவானோ ஒரு வேளை? அப்படிச் செய்யின் இதோ இப்புஷ்பத்தைக் கசக்குவதுபோல் அவன் தேசத்தைக் கசக்குவேன்" என்றான். பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு,

அனந்தபட்டர்: "இறைவனே! நான் இந்நாள் சொன்ன பதிலைவிட வித்தியாசமாய் இன்று என்ன சொல்லப் போகிறேன். நான் போயிருந்த காலத்தில் உதயபுரியில் இருந்த நிலைமைகளையும், நடவடிக்கைகளையும், அவ்வரசன் செயல்களையும், பார்த்தமட்டில் அவன் வார்த்தைகளைச் சந்தேகிக்க இடமில்லையென்று—"

அரசன் "அப்படிச் சொல்லவேண்டாம், மலைச்சாரலில் வாழும் அவ்விராஜ புத்திரர்கள் நரியினும் மிகுந்தவர் சூழ்ச்சியில்! நம்பவும் கூடுமா அவர்களை! துண்டிக்கிறேன் சமயம் வரட்டும்" என்று ஆர்த்தான்.

"ஐயா! நாம் என்னவோ சண்டைக்குத் தயாராய் இருத்தலே நலம். நமது சேனை வேலையில்லாமல் ஏங்குகின்றது. 'மயிலே! மயிலே! இறகுகொடு' என்றால் கொடுக்குமா சாதாரணமாய்? இதைச் சமுகத்தில்

யோசனை செய்யவேண்டாமா? என்னை முன்னமேயே ஆலோசனை கேட்டிருந்தால்—'' என்று பேசத்தொடங்கினன் மீரான்சாகிப் பகதூர்.

இப்பிரபு சேனைகளின் விசாரணைக் கர்த்தா. யுத்தமென்றால் கோழிச்சண்டை ஆட்டுச் சண்டை என்று எண்ணம் இவனுக்கு. ஜனங்கள் இறந்தவரையில் பூபாரம் குறைகின்றதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள் அல்லவா? அம்மாதிரி எண்ணுகின்ற மஹா புருஷர்களில் மீரான்சாகிப் முதன்மையானவன். யுத்தத்திற்குத் தானே முன்போய்ச் சண்டை செய்யக்கூடிய பலமும் தைரியமும் உடையவன் அல்லன். ஆனால் யுத்தத்தில் ஏன் இவனுக்கு இத்தனை பிரியம் என்றால் படையெடுத்துச் செல்லும் சேனைக்கு ஒவ்வொரு இடத்திலும் வேண்டிய சாமான்களைச் சேகரிக்க வழியேற்பட்டால் தனக்கு வேண்டுமளவு திரவியம் கிடைக்குமென்று நினைத்திருந்தான். பாவம்! இவ்விதமாய் இவன் இளம் பிராயத்தில் சேர்த்த சொத்திற்கு அளவில்லை. அரசனும் மற்றப் பிரபுக்களும் இவனைச் சிநேகம் செய்துகொண்டது இவனுடைய குணத்திற்காகவன்று. தன் பண வலிமையால் இராஜாங்க விஷயம் எதையும் தன் இஷ்டப்படி நடத்த முயலுவான். மனோதிடமுள்ள ஆமத் பாக்ஷா அப்பொழுதுக் கப்பொழுது கட்டில் வைத்திருப்பதால் இந்தப் பிரபு கலகங்கள் செய்யமுடியாமல் இருக்கின்றது. சாமர்த்தியமற்ற அரசன் இருந்திருப்பானேல் விபரீதம் விளைந்திருக்கும்! எல்லாப் பிரபுக்களுக்கும் இந்த விவரங்களெல்லாம் நன்றாய்த் தெரியும்.

மீரான் சாகிப் பகதூர் இவ்வாறு பேசவே, அனந்தபட்டர் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், அரசன் முகத்தைப் பார்த்தார்.

பாக்ஷா.—''சண்டைதான் இருந்தே யிருக்கின்றதே: என்றைக்கும் நமது சேனை சித்தமாய் இருக்கின்றதல்லவா? நமக்கு அவ்விஷயத்தில் விசார மென்ன? ஆள் தேட வேண்டுமா? வருந்தி யழைக்கவேண்டுமா? ........... இன்று என்னவோ என் மனம் அமைதியாய் இருக்கவில்லை. யாராகிலும் நமது தாதாகானை வரவழையுங்கள். அவருடைய பாட்டுக்களாவது எனது மனக் கொதிப்பைத் தணிக்குமோ பார்ப்போம்......''

மந்திரி மஹபத்கான்.—'' விசித்திரவீரியரையும் அழை—''

அரசன்.—''விசித்திரவீரியரா?—ஹா! விசித்திரவீரியரா? அவருடைய பாட்டுக்கள்—''

அனந்தபட்டர்.—'' விசித்திர வீரியரைப்பற்றித் தாங்கள் இத்தனை தூரம் யோசிக்க வேண்டியதில்லை. அவர் ஊரை விட்டுப் போய்விட்டார்.''

பாக்ஷா.—''என்ன சொன்னீர் ஐயா? விசித்திரவீரியர் ஊரைவிட்டுப் போய் விட்டாரா? அப்படியா? எப்பொழுது? எப்பொழுது? என்னிடம் சம்மானத்துக்குக்கூட வரவில்லையே! ஏன் இத்தனை அவசரம் அவருக்கு? இப்படி ஒருதடவையும் சொல்லாமல் போனதில்லையே...எந்த ஊருக்குச் சென்றார்? சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவார் போலும்.''

அனந்தபட்டர்.—'' மஹாராஜா! விசித்திர வீரியர் போனவிடமே தெரியவில்லை. பத்து நாளைக்குமுன் ஒருநாள் என்னிடம் ஊருக்குப் போக வேண்டுமென்று சொன்னார்; அவ்வளவுதான். இரண்டு தினம் கழித்து விசாரித்ததில் அவர் வீட்டில் ஒருவரும் இல்லையென்ற சங்கதி தெரியவந்தது. எவ்வளவு தூரம் விசாரித்தபோதிலும் அவர் போன திசைகூடத் தெரியவில்லை.''

'' அவர் புறப்பட்டுப் போனது நமது சபைக்கு ஒரு குறைவுதான். ஹிந்து நாட்டில் அவரை மிஞ்சின பாடகர்களும் உண்டோ? இதுவும் நமது துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். கடைசியாக அவரிடமிருந்து கேட்ட பாட்டு என் மனத்தைப் புண்படுத்திய தென்றாலும்—ஹா! ஹா! அந்தக் குரலும், பாட்டின் அமைப்பும் விஷயமும், என்னவென்று வர்ணிப்பது! பொருள் விளங்கவில்லை யென்றாலும், முற்றிலும் விவரமாகாமல் இருக்கவில்லை. நானும், பாவி, கோபத்துடன் அவரைக் கடிந்தேன். இன்னொரு முறை அந்த லலிதையின் அழகையும், குணங்களையும், அவர் எடுத்துச் சொல்ல நான் கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே! என்ன கொடுமை! என்ன கொடுமை!'' என்று சொல்லிக்கொண்டு அப்படியே சிம்மாஸனத்தில் சாய்ந்துவிட்டான் பாக்ஷா.

செய்கின்றார்கள் சைத்தியோபசாரம். விழித்தான் பாக்ஷா. தன் மனத்தளர்வைச்

சபையோர் முன்னிலையில் காட்டியதற்குச் சற்றே வெட்கமடைந்தான். பரபரப்புடன் "ஆகவே விசித்திரவீரியர் நமது நாட்டை விட்டு, அகன்றார். இனி அவரைக் காணும் போது பேசிக்கொள்வோம். தாதாகாலே அழைத்து வாருங்கள்" என்றான். சொன்னதுதான் தாமதம். ஓட்டம் பிடித்தான் ஒரு சேவகன். ஓடியவன் மறுபடி திரும்பி வந்து "அரசர்க்கரசே! வெளியே ஓர் ஒற்றன் வந்து காத்திருக்கின்றான்" என்றான்.

சுமாலி.—'எங்கிருந்து வந்தவன்?"

சேவகன்.—"கிழக்கே அரவல்லி மலைச்சாரலில் நின்று வருகின்றானாம்."

அரசன் —"சரி! சரி! உடனே வரச்சொல் உள்ளே. பிறகு உன் வேலையை முடித்துக் கொண்டு சீக்கிரம் திரும்பிவா"

அடுத்த நிமிஷத்தில் சபையோர்முன் ஒரு ஒற்றன் வந்து நின்றான். அவன் தேகமெல்லாம் மாசு படிந்திருந்தது. தாடியெல்லாம் புழுதி நிரம்பிச் சென்னிற மடைந்து, வர்ணம் தீட்டியதுபோல் விளங்கிற்று. ஆடைகளும், குப்பாயமும், ஜலம் கண்டு வெகு நாளாயின. சலாம் செய்து தலை குனிந்து நின்ற ஒற்றனை மந்திரி மஹபத்கான் "ஹே! ஒற்றா! நீ மாளவ தேசத்தில் வேலை செய்கின்றவனல்லவா?" என்று கேட்டான். ஒற்றன் தலை நிமிர்ந்து "ஆம்" என்றான்.

அப்பொழுது அவனுடைய குழிந்த கண்களும், வாடிய முகமும், வற்றிய கன்னங்களும், உட்குழிந்த நெஞ்சும், அவன் மிகவும் சிரமப் பட்டு வந்திருக்கின்றான் என்பதற்கு சாக்ஷியாய் நின்றன.

"சமாசாரம் என்ன?" என்று கேட்டான் பாக்ஷா.

ஒற்றன்.—(சபையாரைச் சுற்றிலும் பார்த்து விட்டு) "அரசர்க்கரசே! தங்களிடத்தில் தனியாய்ச் சொல்ல—"

பாக்ஷா.—"யோசனை செய்யாதே! துரோகம் என்பதே ஆமத் முன்னிலையில் இல்லாது. என் சபையோர் யான் கேட்கக் கூடியதையெல்லாம், கேட்க யோக்கியதை யுடையவர்கள். சொல் சங்கதியை விரைவாய்."

ஒற்றன்.—(மற்றொருமுறை சபையோரைச் சுற்றிலும் பார்த்துவிட்டு) அனந்தபட்டரைச் சுட்டிக்காட்டி "எஜமான் உதயபுரிக்கு வந்த காலத்தில் நான் அவ்விடத்துக்கு 7 மைல் தூரத்துக்கு அப்பால் ஒரு கிராமத்தில் இருந்தேன். அவர் இவ்விடம் புறப்பட்டு வந்தது முதல் ஒருவாரத்துக்கு முன் வரையில் உதயபுரியிலும் சுற்றுப் புறங்களிலும் திரிந்து கொண்டிருந்தேன். இரண்டு நாளாவது சேர்ந்ததுபோல் ஒரு கிராமத்தில் நிற்காமல் சுற்றித் திரிந்தேன். விஷயங்களை நேராய் அறியச் சில சேவகர்களைச் சினேகம் செய்தேன்—"

பாக்ஷா.—"நீசெய்த காரியமெல்லாம் சரியே. உன் பிரதாபம் எங்களுக்கு வேண்டாம், சொல்லடா தம்பி விஷயத்தை!"

ஒற்றன்.—"அரசே! அந்நாடு முழுவதும் கோட்டைகள், மதில்கள், அகழ்கள்—இவற்றைச் சீர்ப்படுத்துகிறார்கள். திறைகள் அதி சீக்கிரமாய் வசூலாகின்றன. தேர்ந்த சேனை, மலை நாடுகளினின்று கீழும், புதிய சேனை மலை நாடுகளில் வேலை பழகவும் செல்லுகின்றன. உதயபுரியிலும், மற்ற முக்கியப் பட்டணங்களிலும், ஆயுதசாலைகளில் கணக்கில்லாத விற்களும், அம்புகளும், வாட்களும், வேல்களும், சூலங்களும் தயாராகின்றன."

பாக்ஷா, மீசை துடிக்க, கைகால் பறக்க, சிம்மாஸனத்தின்மீது ஒரு அறை அறைந்து, "என்ன ஐயா சொல்லுகின்றீர் அனந்தபட்டரே? பார்த்தீரா, அந்தப் பயல் பிரதாபசிங்கன் செய்யும் காரியத்தை! என்னவோ சத்திய அரிச்சந்திரன் என்றீரே முன்னால்! இப்பொழுது உம்முடைய அபிப்பிராயமென்ன?" எனக் கேட்டான்.

அனந்தபட்டர்.—"அரசே! என் அபிப்பிராயமென்ன! நான் எனது அற்பப் புத்தியால் நடந்த விஷயங்களைத் தப்பாய் அர்த்தம்செய்து கொண்டு வந்திருக்கவும் கூடும். இந்த அறிவிற் சிறந்த ஒற்றன்போல் பலநாள் இருந்து விஷயங்களைப் பார்த்து வர எனக்குச் சாவகாசம் இல்லையென்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அங்கு நான் தங்கிய 30 நாழிகையும் என்னிடம் பிரதானி, இரண்டாவது, மூன்றாவது மந்திரி, அரண்மனை விசாரணைக் கர்த்தா முதலான உயர்ந்த உத்தியோகஸ்தர்களல்லாமல் வேறு ஒருவரும் நெருங்கவில்லை. கீழ் மக்கள்களிடமிருந்து நான் ஒரு சமாசாரமும் அறிந்து கொள்ளவில்லை. இவ்வொற்றன் சொல்லும் சமாசாரமும், தங்களுக்கு இத்

துணை கோபத்தை விளைவிக்கவேண்டிய அவசியமும் இல்லை, சக்ரவர்த்தியாகிய சுல்தான் ஆமத்பாக்ஷா தனக்கு மாப்பிள்ளையாக வரும்போது, பிரதாபசிங்கன் தன் மாப்பிள்ளையை இடிந்த கோட்டையிலும், வௌவால் குடியிருக்கும் அரண்மனையிலும், மாசு படிந்த கூடத்திலும், இறக்குவதற்குச் சம்மதிப்பானா? அப்படிச் செய்வான் என்று நான் எண்ணவில்லை. கல்யாணத்தை உத்தேசித்து நகரங்களைப் புதுப்பித்து, கோட்டைகளைப் பண்படுத்தி, வீடுகளையும் தெருக்களையும் சீராக்குவதும் தப்பிதமா? ”

பாக்ஷா சற்றுக் கோபம் தணிந்து “நன்று சொன்னீர்! விரைவாய் ஆயுதங்கள் செய்கிறார்களே, அதற்கு என்ன ஸமாதானம் சொல்லப்போகிறீர்—” என்று கேட்டான்.

அனந்தபட்டர்.—“எந்த மூடனாவது கல்யாண காலத்தில் கையில் பணம் வைத்துக் கொள்ளாமல் வெருங்கையனாய் நின்று கொண்டு விழிப்பானா? விரைவாய்த் திறை வசூல் செய்வதினாலேயே யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்கின்றான் என்று சொல்லத் தகுமோ? ஆமத்பாக்ஷா. தன் பின்னிடாச் சேனையுடன் லலிதாதேவியை மணக்க வரும்போது பிரதாபசிங்கன் சேனை, துருப்பிடித்த கத்தியுடனும், ஒடிந்த வில்லுடனும், கூர் மழுங்கிய அம்புகளுடனும், எதிர் கொண்டு வந்து, சுல்தான் சேனையுடன் கலந்து நிற்றல் மரியாதையாய் இருக்குமா? இவ்வொற்றன் சொன்ன விஷயங்களிலிருந்து மாத்திரம், பிரதாபசிங்கன் சண்டைக்கு எத்தனம் செய்கின்றான் என்று நான் எண்ணமுடியாது—”

மீரான்சாகிப்.—“உமக்கு என்ன ஐயா தெரியும்? பிரதாபசிங்கன் சண்டைக்கு வந்தால் உம்மை என்ன செய்யலாம்?”

அனந்தபட்டர்.—“என்னையா?—”

பாக்ஷா.—“மீரான் சாகிப்! நீர் ஏன் வீண் சண்டை போடுகிறீர்? நமது சபையில் ஒவ்வொருவரும் தங்கள் அபிப்பிராயத்தைப் பயமின்றி வெளியிட வேண்டுமென்றல்லவா நமது கோரிக்கை? அப்படியிருக்க நீர் அனந்தபட்டர் சொல்வதைத் தட்டி அவருடன் சண்டை செய்வது சரியன்று. ஏ! ஒற்றா! இன்னும் என்ன விசேஷம்?—”

ஒற்றன்.—“அரசர்க்கரசே! சேவகர்கள் ஜோதிபுரிக்கும், சுகுணபுரிக்கும் போய் வந்து கொண்டிருக்கின்றார்கள். இரகசியம் ஒன்றும் தெரியவில்லை, எவ்வளவு தூரம் பிரயத்தனம் செய்தும், சங்கதி அறிய முடியவில்லை... மங்கள நாயகர் என்ற சேனைத் தலைவர் உதயபுரியை விட்டுப்போனவர், நான் அங்கிருந்த வரையில் திரும்பிவந்து சேரவில்லை.”

பாக்ஷா.—“அதன்பிறகு, இன்னும் என்ன?”

ஒற்றன்.—“இம்மட்டே, இவற்றைப் பார்த்து எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. உடனே சமுகத்துக்குத் தெரியப்படுத்த—”

பாக்ஷா “சரி, சரி, சமாசாரம் முடிந்தால் வெளியே போகலாம்” என ஒற்றன் சலாம் செய்து வெளியே புறப்பட்டான். அரசன் சபையோர்களைப் பார்த்து “கனவான்களே! அனந்தபட்டர் சொல்வதும் சரியென்றே தோன்றுகின்றது. ஆயினும் பிரதாபசிங்கரை முற்றிலும் நம்பவும் எனக்கு மனம் துணியவில்லை. ஒற்றன் சொல்லும் சமாசாரம் முழுவதும் உண்மையேயன்றிச் சந்தேகப்பட இடமில்லை. பிரதாபசிங்கர் உண்மையாகவே யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்யவில்லையானால் நாம் நமது சேனைகளுடன் அவரை எதிர்க்கச் செல்வது அவரை அவமானப்படுத்தியது போலாகும் அவர் யுத்தத்தை எண்ணி வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்வதானால் நாம் ஒற்றனுடைய வார்த்தையைக்கூட லக்ஷியம் செய்யாது ஏமாந்துபோனதாக எல்லாரும் நம்மை இகழ்வார்கள். சபையோர்களே! இவற்றை நீங்கள் நிதானமாய் யோசித்தல் அவசியம்” என்று சொன்னான்.

அரசனுடைய மனம் முற்றிலும் அனந்தபட்டர் காட்டிய வழியில் செல்லவில்லையென்பதை, மீரான்சாகிப் அறிந்ததும், வெகு வினயத்துடன் எழுந்து “அரசர்க்கரசே! எனது அபிப்பிராயத்தை முதலில வெளியிடுகிறேன், சற்று விடை கொடுத்தருளும். மகமதிய நாட்டின் க்ஷேமத்தைக் கோருவதில் நான் எவருக்குப் பின்னாகை மாட்டேன் என்பதை நீங்கள் உண்மையாய் அறிவீர்களல்லவா? அனுவசியமாய் நாம் எப்பொழுதும் சண்டைக்குப் போவது தப்பே, சந்தேகமில்லை. அவசியமுண்டானால, சண்டை செய்யப் பின்வாங்குவ

கங்கையிலே முளைத்தாலும் பேய்ச்சுரை நல்லசுரை ஆமா?

தேன்? ஸாது ஜனங்களுக்கு நன்மையே செய்ய அவதரித்த மஹமத் பிரானும் அவசியம் கண்ட விடத்துச் சண்டைசெய்து நமக்கு நேர்வழியைக் காட்டியிருக்க நாம் பின் வாங்குவ தென்னத்திற்கு! பிரதாபசிங்கன் செய்யும் பிரயத்தனங்கள் எல்லாம் யுத்தத்தை உத்தேசித்ததே! அனந்தபட்டர் சொல்லும் சமாதானம் என் மனதிற்குச் சிறிதும் சரி யென்று தோன்றவில்லை. முற்றிலும் தப்பு என்பது தெளிவாய்த் தெரிகின்றது. பிரதாபன் செய்யும் முயற்சிகளைப் பார்த்தால் அவன் தேசத்தை மட்டுமின்றி ஜோதிபுரியையும், சுகுணபுரத்தையும் நமக்கு எதிராய்த் தனக்கு உதவிசெய்ய அழைப்பான்போல் தோன்றுகின்றது. இல்லையேல், இச்சமயத்தில் தூதர்கள் அவ்விரண்டு நகரங்களுக்கும் அடிக்கடி போய்வரக் காரணம் என்ன? சுகுணபுரத்தரசன் வீரபத்திரன் பிரதாபனுக்கு நேசன் என்பது உலகத்தார் எல்லாருக்கும் தெரிந்த விஷயமேயல்லவா? ஜயபாலனோ பிரதாப சிங்கனுக்கு உறவினனுமாயிற்று. கல்யாண சமயத்தில் நமது அரசனை எதிர்கொள்ள வேண்டுமானால் ஆயிரக்கணக்காய் ஆயுதங்கள் புதிப்பிக்கவேண்டிய அவசியம் இராதென்று புத்திசாலிகளான உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமா? மேலும் இராணுவத் தலைவர் இடம் பெயர்ந்துபோய் நல்ல சேனைகளைத் தலை நகருக்கு அனுப்பவும், பயிற்சியற்ற புதிய சேனைகளை மலைநாட்டுக்கு வேலை பழக முடிக்கவும், ஏதாவது அவசியம் உண்டா?— இன்னமும், மகமதியர்களென்றால் அந்த இராஜபுத்திரர்களுக்கு ஜன்மப் பகை: மனதார வெறுக்கின்றனர். அப்படியிருக்க, நாம் யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்யாதிருப்பது புத்திசாலிகள் செய்யும் வேலையாய் இராது. பலத்த சேனை ஒன்றை யனுப்புவோம். அதை உதயபுரிக்கு எத்தனை பக்கத்தில் கொண்டு போக முடியுமோ, அத்தனை பக்கத்தில் கொண்டுபோய் வைத்துக் கொள்வோம். சண்டை ஏற்படும் பக்ஷத்தில், சேனை சமீபத்தில் இருப்பதாகட்டும். கல்லியாணம் ஆவதானால் அந்தச் சேனையே நமது அரசனுடன் செல்வதாகட்டும். நான் சொல்லுவதில் தப்பு என்ன இருக்கின்றது? அரசன் திருவுள்ளத்துக் கிசைந்தால் ஏற்றுக்கொள்ளலாம்" என்று சொல்லித் தன் ஆசனத்தில் உட்கார்ந்தான்.

அனந்தபட்டர்.—"அரசே! மீரான்சாகிப் பகதூர் சொன்ன விஷயங்களைத் தப்பென்று சொல்ல நான் எழுந்திருக்கவில்லை. அவைகள் முற்றிலும் உண்மையாய் இருக்கவும் கூடும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்கின்றதென்று யாருக்குத் தெரியும்! நாம் சேனைகளைத் தயார் செய்துகொண்டு உதயபுரியின் எல்லையில் வைத்துக்கொள்வது, நமக்கு அந்தஸ்தில் சரியான மண்டலேசுவரன் ஒருவனுடைய நேர்மையைச் சந்தேகித்ததாகும். அவ்வாறு செய்வதால் உட்பகை பலமாகும். சேனை வேண்டுமானால் புறப்படக்கூடிய நிலைமையில் இவ்வூரிலேயே வைத்துக் கொள்வோம். முகூர்த்தவிஷயத்தை நிச்சயம் செய்ய இன்னுமொருதடவை தூதனுப்புவோம். அந்தத் தூதருக்கும் திருப்திகரமாய் அவ்வரசன் பதில் அனுப்பவில்லையானால், நமது சேனை யுத்தத்துக்கு உடனே புறப்படுவதாகட்டும். வீணில் பெரிய சேனையை ஊரைவிட்டுக் கிளப்புவது பயனற்ற செலவுக்குக் காரணமாகும். பொக்கிஷத்தில் இருக்கும் பணத்தை வீண் செலவு செய்வதனால் யாருக்கு என்ன உபயோகமாகப் போகிறது! யோசிக்குமிடத்து எல்லாம் சந்தேகத்தால் செய்யும் காரியமேயல்லவா? அரசனும் தீர்க்காலோசனை செய்யட்டும்."

மற்ற ச்பையோர்களும் பேசிய பின், பாக்ஷா கொஞ்சநேரம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்து பின் "பிரபுக்காள்! உங்கள் மனத்துள் இருப்பவற்றை வெளியிட்டீர்கள்! அதற்கு வந்தனம். துரிதமாய்ப் போய்வரத்தக்க தூதர்கள் நான்கு பேர்களைத் தயார் செய்வாய் மந்திரீ! அவர்களுடன் உதயபுரிக்கு முன் போயிருந்த சிப்பாய்களும் போய்வரட்டும். சிறந்த ஒற்றன் ஒருவனை உடனே உதயபுரிக்கு அனுப்பி அடுத்த வாரத்தில் வந்து சேரும்படி சொல்! சாகிப் பகதூர் மீரான் சாகிப் நமது சேனைக்கு வேண்டிய ஆகாரம் முதலிய சாமான்களைத் தயார் செய்யட்டும்— எப்படியிருப்பினும் பிரதாபசிங்கர், கல்யாண விஷயத்தில் இத்தனை அசட்டையாய் இருப்பது, பொறுக்கக்கூடிய தப்பிதமென்று தோன்றவில்லை. எவ்வளவுதான் திரும்பத்திரும்ப யோசனை செய்யினும், அவ்வரசன் தப்பு மன்

னிக்கக்கூடியதாய் இல்லை. சிங்கத்தை ஆட்டுக்குட்டி ஏமாற்றுமா? ஆமத் பாக்ஷா மனதை நோகப்பண்ணியவர் யார்தான் இதுவரையில் உயிர் வாழ்கின்றனர்? இவனும் என்னை ஏமாற்றுவானாகில் தக்க தண்டனைப்படுவான் என்பதில் ஆக்ஷேபணையில்லை.—இனி என்ன விஷயம் பாக்கியிருக்கின்றது? சபை கலைவோமா? மந்திரீ, நீ என்னுடன் வா" என சிம்மாஸனத்தை விட்டெழுந்தான். சபையோர்களும் எழுந்து விடைபெற்று வெளியே சென்றனர்.

வெளியே சென்ற அனந்தபட்டருக்கு மனக்குழப்பம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. "பிரதாபன்வார்த்தை தவறுவானோ? பிரதாபன் செய்யும் பிரயத்தனங்களின் பொருள் என்ன! உண்மையாகவே சண்டை செய்ய யத்தனம் செய்வதானால் நான் சரியான புத்திமதி சொல்லுகிறேனே பாக்ஷாவுக்கு? நான் சொல்வது தப்பானால் சுல்தானுக்கு என் வார்த்தையில் எத்தனை நம்பிக்கையிருக்கப்போகிறது? இச்சங்கடத்தில் லலிதையின் பாடு என்னவாகும்? இதுவோ யான் இன்று வழியிற் கண்ட சகுனங்களின் பயன்? ஈசன் செயலை யார் தடுக்கலாகும்? நான் நியாயத்தை எடுத்துப் பேசினாலும் அந்த மீரான் சாகிப் என்னைப் பொய்யனென்று காட்டிக்கொடுப்பான்போல் தோன்றுகின்றது......." என்றவர் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

நான்காவது அத்தியாயம்.

## செலவு பெற்றது

வஸந்தபுரியிலிருந்து ஸுவர்ணஸரஸுக்குப் போகும் தெருவில் கிட்டத்தட்ட கடைசி வீட்டில் ஒரு கட்கடை. உள்ளே பாட்டும் மேளமும் காதைப் பிளக்கின்றன. பாட்டைக் கேட்டு ஆனந்தப்பட்டு "பேஷ்! பேஷ்! ஹூ! ஹூ! நடக்கட்டும், நடக்கட்டும்" என்று கத்துகின்றனர் சிலர். மதுவால் மதி மயங்கி மல்லாந்து கிடக்கின்றனர் பலர். நுழைகின்றவர்களை "வா, வா" வென்று எதிர்கொண்டுபோய் உபசரிப்பவர் சிலர். கொஞ்சம் கொஞ்சமாய்ப் பக்கத்தில் வைத்திருக்கும் பாத்திரத்திலிருந்து பானம் செய்துவிட்டு, பாட்டுக்குத் தாளம் போடுகின்றவர் சிலர். உள்ளே இங்ஙனமிருக்க, வெளியே தெருவில் கவுஸ் ஸாகிப், கடையைத் திரும்பிப் பாராமல், அப்பால் போகின்றான். உள்ளிருந்து வரும் பாட்டு, மேளம், தாளம் இவற்றின் சப்தம் கூட அவன் காதில் படவில்லைபோலிருக்கின்றது. தலை குனிந்த வண்ணமே நடந்து செல்லுகின்றான்.

கவுஸ் போவதைக் கண்டு உள்ளிருந்து ஒரு மனிதன் வெளியே ஓடிவந்தான். அவனது தேகத்தையும், உடையையும், முகத்தையும், பார்த்தால் அவன் மல்லீக் மகமத் என்று அறிந்துகொள்ள சந்தேகமும் உண்டா? வந்த மல்லீக் சிப்பாய் "அரே! கவுஸ்! அரே கவுஸ்! கவுஸ்!" என்று கூப்பிட்டான்.

சப்தம் எப்புறமிருந்து வருகின்றதென்று அறிந்துகொள்ள, கவுஸுக்குச் சற்று நேரமாயிற்று. நாற்புறமும் சுற்றிப் பார்த்துப் பின் கடைப்புறம் திரும்பவே வாசற்படியிற் சிப்பாய் நிற்பதைக் கண்டான். மல்லீக் சிப்பாய் உள்ளே செய்துகொண்டிருந்த காரியம் என்னவென்று கவுஸுக்குத் தெரியாமலிருக்குமா! "ஏன் ஐயா கூப்பிட்டீர்: சீக்கிரம் சொல்லும், எனக்கு வேலையிருக்கிறது" என்றான் கவுஸ்.

மல்லீக்.—"என்ன அப்பே வேலை? நீதான் உள்ளே வரமாட்டையே. போவது நானாவது ஒன்னோடே வரேன். என்ன, வரலாமா?"

கவுஸ் மனத்துள் "இது என்ன தொந்தரவா யிருக்கின்றது; நாம் போகிற இடத்திற்கு இந்த யமனும் வரவேண்டுமா?—(வெளிப்படையாய்) தடையென்ன வரலாம்" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான்.

மல்லீக்.—(அவனைப் பின் தொடர்ந்து) "கவுஸ்! உனக்கு எப்போதும் வேலை இருந்துண்டே இருக்குது. எப்பொவும் ஒனக்கு அவசரம் தான். நேத்து சேவுகன் வந்து சொன்னானே தெரியுமா?"

கவுஸ்.—"எந்தச் சேவகன்? மந்திரியிடமிருந்து வந்தவனா? அதற்கென்ன. போகவேண்டியதென்றால் போகவேண்டியதுதான்."

மல்லீக்.—"அது எப்படியப்பா? எங்கேபோறது? இந்த மாதிரி ஆட்டுக்குட்டி போவது போலே போவுதென்னா என்ன இருக்குது.—போவுனும் சண்டைக்கு: கல்யாணமாம்! கல்யாணம்! யாருக்கு வேண்டிருக்கு! கல்யாணம் பண்ணிண்டா சண்டையெப்பிடி நடக்கும்? என்ன கவுஸ் சொல்லு நீ."

கவுஸ்.—ஒன்றும் சொல்லவில்லை. இனி

பதில் சொல்லமாட்டான் என்று கண்டதும், மல்லீக், "இந்தக் கல்யாணமும், அடிக்கொரு தாம், நாம் போறதும், சுத்தமாய் நன்றாயிலே. கல்யாணம் வேணுமானா அவங்க இங்கே வரட்டும்; இல்லாட்டா சண்டைக்குப் போகணும்" என்றான்.

கவுஸ்.—"என்ன ஐயா சண்டையின்மேல் உமக்கு அவ்வளவு ஆசை ?"

மல்லீக்—"சண்டையா ? பிச்சுடமாட்டேன் அந்தப் பாவிகளை ! அந்த வாசக்காப்பான் ரெண்டு பேரையும் என்னான்னு எண்ணிக்கிட்டே. காணணும் அம்முட்டுத்தான், அனுப்பிடுவேன் எமப்பட்டணத்துக்கு.—சரி இது கெடக்கட்டும்: எங்கே போறே சொல்லு. நான் என்ன நாய்மாதிரி நீ போற இடத்துக்கெல்லாம் வந்துகிட்டு இருப்பேனா என்ன ?"

கவுஸ்.—"இஷ்டமில்லா விட்டால் திரும்பிப் போகலாம் நீர். நான் கூப்பிடவில்லையே உம்மை."

மல்லீக்.—"அது கெடக்குதுசொல் அப்பே! எங்க போறே?"

இதற்குள் ஸுவர்ண ஸரவின் கரையோரமாய் வந்து சேர்ந்தனர். சாயங்காலத்து மஞ்சள் வெயிலும், குளிர்ந்த காற்றும், ரம்மியமான ஸரவின் காட்சியும், மூடனான மல்லீக் சிப்பாயின் மனதையும் கவர்ந்தன.

கவுஸ்.—"ஐயா நாளை உதயபுரிக்குப் புறப்படு முன், என் பெற்றோரிடம் விடைபெற்று வரப் போகிறேன். அவ்வளவே."

மல்லீக் :"இம்மட்டுத்தானா — முன்னயே சொல்லியழக் கூடாதா? நான் அப்படியே போயிருப்பேனே—எனக்குத் தூக்கம் வரது. இதோ இந்த மண்டபத்திலே படுத்துத் தூங்கறேன். நீ திரும்பி வரப்போ, என்னை எழுப்பு" என்று பக்கத்தில் கட்டியிருந்த மண்டபத்தில் புகுந்தான்.

கவுஸ் "அப்படியே எழுப்புகிறேன். காற்று நன்றாய் அடிக்கிறது. தூங்கிக்கொண்டிரும்" என்று சொல்லி, மனத்துள் "சனி ஒழிந்தது. இது என்ன இவனுடன் பீடை பிடித்தது போல் ; தூங்கட்டும் குடிவெறியில் பிணம் போல்" என்று எண்ணி அப்பால் போனான்.

அக்கரையில் பனந்தோப்பில் சில குடிசைகள் காணப்படுகின்றன: அவற்றின் புறமாய்க் கவுஸ் விரைந்து செல்கின்றான். மூன்றாவது குடிசையின் வீதித்திண்ணையில் ஒரு கிழவன் உட்கார்ந் திருக்கின்றான். அவனிடம் சென்றதும் கவுஸ் மெதுவாய் "அப்பா" என்றான். கிழவன் கண்ணை விழித்துப் பார்த்து சந்தோஷத்துடன், "கவுஸ்! கவுஸ்! என் குழந்தாய்! வந்தாயா? உள்ளேபோய்க் கால் அலம்பிக்கொண்டு உன் தாயிடத்தில் கேட்டு ஏதாவது தின்பண்டம் பெற்றுக்கொள். ஏது சாயங்கால வேளையில் வந்துவிட்டாய்" என, கவுஸ் "அப்பா, நாளையதினம் மறுபடியும் நாங்கள் ஒருமுறை உதயபுரி போய்வர வேண்டியிருக்கின்றது. சொல்லிக்கொண்டு போக வந்தேன்" என்பதற்குள் உள்ளிருந்த ஒரு கிழவி ஓடிவந்து, "என் கண்மணியே! குழந்தாய்! இப்பொழுதுதானே ஒரு முறை உதயபுரிபோய் வந்தாய். மறுபடியும் என்ன வேலை உனக்கு அங்கே? அரண்மனையில் வேறு ஒருவரும் இல்லையா? உள்ளேவா ; சாவகாசமாய்ப் பேசுவோம். உன் தகப்பனாரும் உள்ளே வருவார். இராத்திரி இங்குத் தங்குகின்றாயா? சமைக்கட்டுமா ?" எனக்கேட்டாள்.

கவுஸ் "இராத்திரி அரண்மனையில் வேலையிருக்கின்றது. எனக்கு இங்கே தங்கமுடியாது. மேலும், நாளை விடியற்காலம் புறப்படவேண்டுமல்லவா ?" என்று சொல்லித் தன் தாயாரைப் பின் தொடர்ந்து உள்ளே புகுந்தான்.

இதற்குள் இரண்டு குடிசைகளுக் கப்பால் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு கை யந்திரத்தால் நூலிழைத்துக் கொண்டிருந்த ஒரு சிறு பெண் கவுஸ் தூரத்தில் வரும்பொழுதே பார்த்து,நடையில் ஒரு பாயை விரித்து மறுபடியும் யந்திரத்தண்டை உட்கார்ந்தார்கள். கவுஸ் நேராய்த் தன் தகப்பனார் வீட்டிற்குத்தான் போவானென்று அவளுக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆயினும் அவன் வருவதைக் கண்டவள், முகம் மலர்ந்தவளாய்த் தன் யந்திரத்தை ஒழுங்கு படுத்திக்கொண்டு, அவனை எதிர்பார்த்தவள்போல் அவன் போன திசையையே இடைவிடாமல் பார்த்துக்கொண் டிருந்தாள்.

தன் வீட்டினுள் நுழைந்த கவுஸ், தன் தாய் தந்தையருடன் சிறிது நேரம் பேசிவிட்டு, சிற்றுண்டி தின்று, நீர் அருந்திப் பின்னர் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினான். அப்பொழுது அவன் தாய் "கவுஸ்!

உனது இரண்டு தமையன்மார்களும் இருக்கும் போது என்னைப்போல் தைரியமுள்ள ஸ்திரீகள் இந்தப் பிராந்தியங்களிலேயே இல்லையென்பர் எல்லோரும். அவர்கள் இருவரும் ஒரே நாளில் சண்டையில் மடியவே, வயது சென்ற நானும் உன் தந்தையும் உன்னையே ஆதரவாக நம்பியிருக்கின்றோம். நீயும் அடிக்கடி தூரதேசம் போவதென்றால் என் தேகம் நிலைகுலைகின்றது. என்ன செய்வோம்! இராஜ ஸேவை பொல்லாததுதான். ஆனாலும் வயிறு ஒன்று இருக்கின்றதே! சுகமாய்ப் போய்வா. வழியில் சண்டை சச்சரவிடாதே. சுத்தவீரனைப்போல் நடந்துகொள், போய்வா!" என்றாள். அவன் தகப்பன், மகனை ஆசீர்வதித்து, "மேல், மேல், உனக்கு உத்தியோகம் உயரட்டும். இராஜபக்தி நிறைந்து உனக்கு அரசனது தயவு பரிபூர்ணமாய்க் கிடைக்கட்டும்" என்றான்.

இருள் மூள்கின்றது. வெளியே வந்தான் கவுஸ். இன்னும் "கீச்! கீச்" என்று நூல் இழைக்கும் இயந்திரம் கத்துகின்றது. சுற்றிலும் ஒருவருமில்லை. நேராய் அப்பெண்மணி வேலை செய்யும் வீட்டில் நுழைந்தான். அவளும் கவுஸ் வருவதைக் கண்டதும், எழுந்து உபசரித்துப் புன்சிரிப்புடன் "உட்காரும்" என்றாள்.

கவுஸ்.—"மங்களாபாய்! எனக்கு அதிக நேரம் உட்கார்ந்திருக்கச் சாவகாசமில்லை. நான் நாளை அதிகாலையில் எழுந்து மறுபடியும் உதயபுரிக்குப் போகின்றேன். இங்கே வந்து என் தாய் தந்தையரையும், உன்னையும்; உன் தகப்பனாரையும் பார்த்துவிட்டுப் போவோம் என்று வந்தேன்" என்றான்.

மங்களாபாய்.—"ஐயா! முன் ஒருநாள் சாயங்காலம் இங்கு வருவதாக ஒரு கோபாலனிடத்தில் நீர் சொல்லி யனுப்பவில்லையா? அன்றையதினம் ஏன் வரவில்லை? இன்று வந்தும் அவசரப்படுகின்றீர். என்ன விசேஷம்? அரண்மனையில் உமக்கு வெகுவேலை போலும்—"

கவுஸ்.—"உண்மையே. எனக்குஇப்பொழுது அரண்மனையில் வேலை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. உண்மையாகவே எனக்கு உன்மீதுள்ள காதல் அன்பு உனக்கே நன்றாய்த் தெரிந்த விஷயம். பலவிதமாய் வர்ணிக்க எனக்குச் சக்தியுமில்லை, சாவகாசமுமில்லை. தெய்வாதீனமாய் இந்தத் தடவை நான் உதயபுரியிலிருந்து க்ஷேமமாய்த் திரும்பி வந்தவுடன் தப்பாமல் உன்னை மணந்துகொள்ளுகின்றேன். என் அருமைப் பெற்றோர்களும் உதவியின்றித் தவிக்கின்றனர். உன்னையல்லாமல் வேறு யாரை அவர்கள் மருமகளாக அடையப் போகின்றார்கள். இனித் தாமதிக்க நேரமில்லை. உன் தகப்பனார் இன்னும் ஸரவிலிருந்து வரவில்லைபோலும். வந்தவுடன் அவரிடம் நான் வந்த சங்கதியைத் தெரியப்படுத்து, எனக்கு உத்தரவு கொடுக்கின்றாயா?"

மங்களாபாய்.—"உத்தரவுக்கென்ன? நமது கல்யாணம் எத்தனை சீக்கிரமாய் நடக்கின்றதோ அப்படியேதான் சுல்தானுடைய கல்யாணமும் நடக்கும்போல் இருக்கின்றது. ஏதோ உண்டு, இல்லை, என்று பேசிக்கொள்ளுகிறார்களே ஜனங்கள்!"

கவுஸ்.—"அரசன் கல்யாணம் எப்படியாகுமோ, நாம் க்ஷேமமாய் இருப்பின் நமது கல்யாணம் நடக்குமென்பதில் சந்தேகமில்லை. உன்னை மணக்கவேண்டுமென்றும், உன் உதவியால் என் பெற்றோர்களுக்குச் சுகம் உண்டாக வேண்டுமென்றுமல்லவா இவ்வுயிரை நான் வைத்திருக்கிறேன்? உன் அன்பினும் மேலான பெருமை எனக்கு என்ன இருக்கின்றது? உன் தகப்பனுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்வாய். நான் போய் வருகிறேன்."

மங்களாபாய் "உமக்கெல்லாக் காரியமும் கைகூடட்டும். வழியில் ஜாக்கிரதையாய்ப் போய்வாரும்" எனக் கண்ணும் கண்ணீருமாய் விடைகொடுத்தாள். சுத்த வீரனை கவுஸின் மனமும் சற்றுக் கலங்கிற்று.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றபடி கவுஸுக்கு அவர்களைத் தவிர வேறு தெய்வமே இல்லை யென்று அபிப்பிராயம். முன்னிரண்டு மக்களை இழந்து நொந்து கிடக்கும் தன் பெற்றோர்களைச் சந்தோஷப் படுத்த, என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிவான். அவர்கள் மனதிற்கிணங்கி தன் தமையன்மார்களைப்போல் ராணுவ வீரனானான். கல்வித்திறமையோ மிகக்குறை. வஸந்தபுரிக்கு வந்தபோது அடிக்கடி வந்து பெற்றோர்களை விசாரிப்பது போலவே ஐந்திரபுரியில் இருக்

கடலைத் தூர்த்தும் காரியம் முடிக்கவேண்டும்.

கும்பொழுதும் தான் நேரில் வந்தாவது, சினேகிதர் மூலமாயாவது அடிக்கடி அவர்களின் க்ஷேமத்தை விசாரித்து அறிவான்.

இளம்பிராய முதற்கொண்டே மங்களா பாயோடு பழகி விளையாடி அவள் நடத்தையை அறிந்தவனாதலால் அவளுடைய அடக்கம் அறிவு, நேர்மை, சுறுசுறுப்பு, சிக்கனம், கருணை இவற்றைக் கண்டு வியந்து, அவள்பால் தன்னை யறியாமலே ஈடுபட்டான். அவளும் கவுஸுடைய தைரியம், புஜபலம், வாய்மை, கம்பீரம் நேர்மை, இவற்றைக் கண்டு அவனிடம் அன்பு கொண்டாள். குழந்தைப் பருவம் முதற்கொண்டே முற்றின அன்பு இருவர் பெற்றோர்களுக்கும் தெரிந்தது. இருதிறத்தாரும் தடைசெய்யாமல் சிறுவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்க இடம் கொடுத்தார்கள். கவுஸ் தன் பெற்றோர்களுக்குத் தற்காலம் எப்படி ஒரே மகனோ அப்படியே, மங்களாபாயும் ஒரே பெண். தாயையும் இழந்துவிட்டாள். தகப்பன் மட்டும் மீன் பிடித்து விற்று ஜீவனம் செய்து வருகின்றான். அவனது வலை, பை முதலிய சாமான்கள் செய்ய நூல் நூற்றுக் கொடுப்பதெல்லாம் மங்களாபாயே. இரண்டு குடும்பங்களும், மகமதிய மதத்தில் சேர்ந்து ஒருதலை முறைதான் ஆயிற்று. கற்பமைந்த பெண்ணை யடைவதினும், வேறு என்ன பெருமையை அடையப்போகிறான்? தன் உலக இன்பமெல்லாம் மங்களாபாயிடத்தில் குடிகொண்டிருப்பதாக நினைத்தான், கவுஸ் சாகிப்!

---

## கல்விக் குறிப்புகள்
## Educational Notes

**மாகாணக் கல்வி மஹாநாடு**

நாளது மாதத்தில் திருச்சினாப்பள்ளியில் மூன்றாவது மாகாணக் கல்வி மஹாநாடு, திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜில் சரித்திர போதகாசிரியரான பிரபல வாக்மி ஸ்ரீமான் K. V. அரங்கஸாமி ஐயங்காரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கல்வி, கேள்வி, அந்தஸ்து முதலியவைகளில் எவ்விதத்திலும் ஷை ஸ்தானத்துக்கு ஐயங்காரவர்கள் ஏற்றவர்களே. அருமைவாய்ந்த அவரது உபன்யாஸத்தை முழுவதும் போதினியில் பதிப்பிக்க முடியாததற்குப் பெரிதும் வருந்துகிறோம். ஆயினும் மஹாநாட்டில் தீர்மானமாகிய முக்கிய விஷயங்களை நமது அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். அவையாவன :—மஹாநாட்டில் தென்னிந்தியா உபாத்தியாயர்களும், உபாத்தியாயர் சங்கங்களும் அதிக சிரத்தை காட்டவேண்டியதுடன், சுதேச சமஸ்தான உபாத்தியாயர்களும் அதற்கு அழைக்கப்படவேண்டும்: ஆரம்பக் கல்வியையும் நடுத்தரக் கல்வியையும் நிர்வகிக்கவோ மேற்பார்வையிடவோ பலவகையான முறைகள் இருக்கக்கூடாது. ஒற்றுமைப்பும் அல்லது ஒரே மேற்பார்வையும்தான் வேண்டும்; மதப்படிப்பு சம்பந்தமாய் மனச்சாக்ஷியை மதித்து மாணவர்கள் நடந்துகொள்ள இடந்தரவேண்டும்; பள்ளிக்கூடங்களில் கைத்தொழில் பயிற்சிக்கான வசதிகள் ஏற்பாடாக வேண்டும்; பெரிய பிள்ளைகளுக்கும் உயர்தரப் படிப்புப்பெறும் மாணவர்களுக்கும் ராணுவப் பயிற்சி செய்துவைக்கவேண்டும்; உபாத்திமார் சங்கத்திலிருந்து சில பிரதிநிதிகளை ஸர்வகலாசாலைச் சங்கத்திற்கு அனுப்பவேண்டும்; முனிஸிபாலிடிகளில் ஆரம்பக் கல்வியை இலவசமாயும் கட்டாயமாயும் செய்யவேண்டும்; கலாசாலைகள் இருக்குமிடங்களிலெல்லாம் யூனிவர்ஸிடிப் பரீக்ஷைகளை நடத்தவேண்டும்; பாடசாலைகளில் வைத்ய பரிசோதனை விஷயத்தில் அதிகமான சிரத்தைவேண்டும்; இவைகளன்றி, கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றியும் சுகவழி, சுகாதாரம் ஆகிய பாடங்கள் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக்கப்படவேண்டியதை வற்புறுத்தியும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் தேசபாஷை மூலமாயே கல்வி போதிக்கப்படவேண்டுமென்றும், சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும் சர்க்கார் உதவிபெறும் பள்ளிக்கூடங்களிலும் ஜாதி வித்தியாசமின்றி எல்லா வகுப்பினரும் சேரச் சவுகரியம் செய்யவேண்டுமென்றும் சில தீர்மானங்கள் நிறைவேறின.

---

கடல் நீர் நிறைந்தாவதென்ன, காஞ்சிரை பழுத்தாவதென்ன?

**பஞ்சமர் கல்வி வசதி.**

“சர்க்கார் நிர்வாகத்திலுள்ள எந்தப் பள்ளிக்கூடத்திலும் ஜாதியை உத்தேசித்து எந்தப் பையனையுஞ் சேர்த்துக்கொள்ள மறுக்கக்கூடாது” என்பது கவர்ன்மெண்டாரின் கொள்கை. ஆனால் அநுஷ்டானம் மட்டும் வேறாக விருக்கிறது. இந்த மாகாணத்தில் சர்க்காருடைய விசாரணையின் கீழிருக்கும் 8,157 பள்ளிக்கூடங்களில் பஞ்சமர்களைச் சேர்த்துக் கொள்ளும் பள்ளிக்கூடங்களின் சங்கியை 60 என்று தெரியவருகிறது. ஜாதியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற மனோபாவமே இதற்குக் காரணமாகும். இந்தத் துர்த்தசையை நிவர்த்திக்கக் கருதிய கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். சர்க்கார் விசாரணையிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் பஞ்சமர்கள் சேரமுடியாமல், பள்ளிக்கூடக் கட்டிடமானது அக்கிரகாரம், கோவில், சாவடி முதலிய இடங்களில் இருக்குமானால், பஞ்சமர்கள் போகக் கூடிய இடத்துக்குப் பள்ளிக்கூடத்தை மாற்றவேண்டும். வாடகைக் கட்டிடத்தில் பள்ளிக்கூடம் ஏற்பட்டிருந்து அதில் பஞ்சமர்கள் வரக்கூடாதென்று கட்டிடத்தின் சொந்தக்காரர் சொல்வாராயின், வேறு கட்டிடத்துக்கு பள்ளிக்கூடத்தை மாற்றவேண்டும். எல்லா வகுப்புப் பிள்ளைகளும் போகக்கூடிய இடத்திலல்லாமல் சர்க்கார் பணத்தைக்கொண்டு இனி பள்ளிக் கூடங்களைக் கட்டக்கூடாது. இந்த உத்தரவின் மேலான கருத்தை நாம் அங்கீகரிக்கிறோமென்றாலும், இவைகளில் மட்டும் மேலே கூறிய துர்த்தசை நிவர்த்தியாய்விடாது. உயர்ந்தோர் என்று நினைத்துக்கொண்டிருப்பவர்களுடைய அநுதாபத்தாலும் விவேகத்தாலும் தான் பஞ்சமரின் கஷ்டம் ஒழியவேண்டும்.

* * *

**ஆசார்ய ஆச்ரமம்.**

இப்போது நமது நாட்டில் நடையாடிவரும் கல்விமுறையானது ஜன ஸமூஹத்தின் புரோவிருத்திக்கு ஏற்றவண்ணம் அமைந்திருக்கவில்லையென்பதை யுணர்ந்த சில பிரமுகர்கள் ஆங்காங்கு புதியமுறையில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதைக் காண்கிறோம். உதாரணமாக பஞ்சாப் மாகாணத்திலுள்ள குருகுலம், வங்காளத்திலுள்ள சாந்தி நிகேதனம், ஆகியவற்றைச் சொல்லலாம். இப்போது, இவைகளுடைய கோஷ்டியில் சேரக்கூடிய ‘ஆசார்ய ஆச்ரமம்’ என்றொரு கல்விச்சாலை வங்காளத்தில் ஏற்படப்போவதாக அறிகிறோம். இச்சாலையிலே ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரே இடத்தில் வசித்து நெருங்கிப் பழகுவார்கள். பொதுவாக 7-வயதுமுதல் 12 வயது வரையிலுள்ளவர்களே அங்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தக்க சன்மார்க்கக் கல்வியும் மதக்கல்வியும் போதிக்கப்படும். போதனை வங்காளி பாஷை மூலமாகவேதான் நடைபெறும். லௌகிகக் கல்வியுடன் விவசாயம், கால்நடை வளர்த்தல், நெசவு முதலிய உபயோகமான தொழிற் கல்வியும் போதிக்கப்படும். இதில் ஹிந்துக்களில் யாவரும் சேரலாம். கனம் மணீந்திர சந்திரநந்தி, பாரிஸ்டர் ஸி. ஆர். தாஸ், நியாயமூர்த்தி. பி. ஆர். தாஸ் முதலியோர் இப்பள்ளிக்கூடத்துக்கு நிர்வாககர்கள்.

---

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### ஸேவை

கடப்பை ஜில்லாவிலுள்ள ஓர்பள்ளிக்கூடத்தில் பாடம் நடந்துகொண்டிருக்கின்றது. மணி ஸுமார் மூன்றிருக்கும். திடீரென ஊதுகுழலின் சப்தம் கேட்டது. அச்சப்தம் அதிவேகமாய் விட்டுவிட்டுக் கூவிற்று. சப்தம் கேட்டவுடனே பாடங்கள் நின்றன. பையன்கள் தம் உபாத்யாயரிடம் உத்தரவு பெற்று வெளியே சென்று, அங்கு சில மாணவர்களுடன் சற்றுப் பேசி விட்டுக் கனவேகமாய் ஊருக்குள் சென்றனர். ஊருக்குள் போகப் போக கும்பல் அதிகமாயிற்று. எங்கேயோ நெருப்புப் பற்றிக்கொண்டதாம். அதையணைக்க, பாடசாலை மாணவர்கள் செல்கின்றனர் என்று வழியிலுள்ளோர் சொல்லிக் கொண்டனர்.

---

கடல் தாண்ட ஆசை உண்டு, கால்வாய் தாண்டக் கால் இல்லை.

சிறுவர்கள் எல்லோரும் கடைத் தெருவே சென்று ஓர் சந்திற்குள் நுழைந்தனர். அங்கே ஓர் வீட்டின் முற்றத்தில் வைக்கோற்போர் ஒன்று பற்றி எரிந்துக்கொண்டிருந்தது. பக்கத்து வீடுகளிலும் பல வைக்கோற்போர்களிருந்தன. சிறுவர்கள் வருவதற்கு முன்னமே, சிலர் அணைக்க முயன்று கொண்டிருந்தனர். ஆனால்வேடிக்கை பார்த்துக்கொண்டு, அவ்வீட்டின் மண்மெத்தையின்மேல் உட்கார்ந்திருந்தவர்கள் அனேகர். சிறுவர்களுடன் அப்பாடசாலையின் உபாத்யாயர்கள் இருவரும் வந்திருந்தனர். வயதிலும் பலத்திலும் பெரியவர்கள் தெருவிலிருந்த கிணற்றிலிருந்து உள்முற்றம்வரைக்கும் அருகாமையில் நிற்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிரே சிறுபிள்ளைகள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். இரண்டு தாம்புக்கயிறுகளும் 10,15 பித்தளைக் குடங்களும் மண்குடங்களும் சேர்க்கப்பட்டன. பெரியவர்கள் நால்வர் கிணற்றண்டையிலிருந்து நீரை எவ்வளவு வேகமாய் எடுக்கமுடியுமோ அவ்வளவு வேகமாய் எடுத்துக்கொண்டிருந்தனர். நீர்க்குடங்கள் பெரியவர்களால் கைமாற்றப்பட்டு வெகு வேகமாய் உள்ளே அனுப்பப்பட்டன. உள்ளே முற்றத்தில் சிலர் அந்த நீரை வாரி வைக்கோற் போரின்மீது, இறைத்தனர். வேறு சிலர் தம் கால்களால் நெருப்பை அணைக்க முயன்றனர். வேறு சிலர் அணைந்த வைக்கோலை நெருப்புப்படாத வேறொருபுறம் சேர்த்தனர். மற்றும் சிலர், குடங்களினின்று நீர் கொட்டப்பட்டவுடனே காலியான குடங்களை சிறுவர்கள் மூலமாய் கிணற்றிற்குக் கொடுத்தனுப்பினர். வெகு சீக்ரத்தில் நெருப்பு அடங்கியது. மறுபடியும் ஊதுகுழல் கேட்டது; அனைவரும் நின்றனர். வேலையை நிறுத்துவதற்கு அது அறிகுறி. உபாத்யாயர் உட்சென்று பார்த்து நீர் போதுமென்று நினைத்ததும், வேலையை நிறுத்த உத்தரவிட்டார். சிறுவர்கள் தம்மிடங்களை விட்டு, உள்ளே என்ன நடக்கிறதென்று பார்க்கச் சென்றார்கள்.—ஆ, அதென்ன, புகை மறுபடியும் கிளம்புகிறது! ''நீர் இன்னும் வேண்டும்'' என்று முற்றத்திலிருந்து வார்த்தை வரவும், முன்போலவே பையன்கள் நிற்கின்றனர். காரியமும் முன்போலவே நடக்கின்றது.

கடைசியில் நெருப்பை அணைத்தாயிற்று, இனிப் பயமில்லை, என்று அங்குள்ளவர்கள் சொன்னதும், அனைவரும் வெளிச்சென்றனர். வைக்கோற்போரின் சொந்தக்காரன், மாணவர்களோடு வந்த உபாத்யாயர்களைக் கூப்பிட்டு, மாணவர்கள் செய்த செயலுக்குப் பலனாக, பணம் கொடுப்பதாகவும் அதைக்கொண்டு சிறுவர்களுக்குத் தின்பண்டம் வாங்கிக் கொடுக்கும்படியும் வேண்டினான். பணம் வாங்குவது தங்களுக்கு இழுக்கென்றும் பணத்திற்காக மாணவர்கள் வேலை செய்யவில்லையென்றும் சொல்லிவிட்டுப் பையன்களை அழைத்துக் கொண்டு உபாத்யாயர்கள் சென்றனர். இந்த சம்பவத்திற்கு முன்னும் பின்னும் பலஇடங்களில் நெருப்புப் பற்றினபோதெல்லாம் மாணவர்கள் போய் தங்களாலான உதவி செய்திருக்கின்றனர். மாணவர்களைக் கண்டால் அவ்வூராருக்கும் பிரியம் அதிகம்.

இனி இதைப்பற்றிச் சற்று யோசிப்போம். ஊது குழல் சப்தம் கேட்டதும் மாணவர்கள் வகுப்பிலிருந்து வெளி வருவானேன் ? என்று கேள்வி பிறக்கும். இந்தப் பள்ளிக்கூடத்தில் பாலஸேவைச்சேனை ஒன்றுஇருக்கிறது (Boy Scout Troop) அச்சேனையைச் சேர்ந்தோர் தம் பேருக்கேற்கே ''ஸேவையை''விரதமாகக் கைக்கொண்டிருக்கின்றனர். ஊதுகுழல்பயிற்சி அவர்களுக்குண்டு. அதன் மூலமாய் ஸேவகர்களைச் சேர்க்கவும் அபாயம் என்று தெரிவிக்கவும் முடியும். அதன்படியே அவர்கள் வந்தனர். மற்றும் எப்பொழுதும் செய்யவேண்டிய காரியம் (இங்கு நெருப்பை அவித்தல்) நிதானமாகவும், கலவரமின்றியும் செய்தாற்றான், காரியம் ஸரிவர நடைபெறும் என்பதை அவர்கள் அனுபோகத்திலறிந்தவர்கள். சிலர் நீர் தூக்கவும், சிலர் அதை வேகமாய் உள்ளேயனுப்பவும், காலியான குடங்களைத் திருப்பியனுப்பவும் இராது, ஒவ்வொருவரும் தாமே எல்லாம் செய்யவேண்டும் என்றும் முயன்றால் வேகமாக வேலைசெய்ய முடியுமா?

"சிறுவர் செய்த காரியத்திற்கு சொந்தக்காரன் பரிசு அளித்தபோது, உபாத்யாயர் பெற்றுக்கொள்ளாதது தப்பு'' என்று சொல்வர் சிலர். ஏதாவது கொடுப்பது நல்லது என்று வேறு பலர் கூறுவர். அப்படியானால் உபாத்யாயர்கள் செய்தது ஸரியா ?

சற்று யோசிப்போம். உபாத்யாயர்கள் அவ்

கடல் மீனுக்கு நுளையன் இட்டதே சட்டம்.

வாறு செய்யக் காரண மென்ன?

சிறுவர்கள் நெருப்பை அவிக்கப்போனது பணத்திற்காகவன்று. தம்மாலான உதவி, கஷ்டப்படுபவர்களுக்குச் செய்யவேண்டு மென்ற எண்ணத்தினால்தான். இப்படியிருக்க,சொந்தக்காரன் கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டால், வேறு எவனுக்காவது உதவிசெய்யும்போது, இவனும் முன்னவனைப்போல நமக்குப் பணம் கொடுக்கமாட்டானா என்ற ஆசை உண்டாக இடந்தரும். அம்மாதிரி கொடுப்பது ஸேவையைவிலைகொடுத்து வாங்குவதாகிறது. சிறுவர்கள் மனதில், பணத்தின்மேல் ஆசையுண்டாகக் கூடாதென்றே, பணம் வேண்டாமென்று உபாத்யாயர்கள் சொல்லிவிட்டனர்.

அப்படியானால், வைக்கோற் போரின் சொந்தக்காரன் செய்தது தவறா? அன்று. ஏனெனில், தன் ஸொத்து முழுவதும் பாழாய்ப் போகாமல் காப்பாற்றின மாணவர்கள் கொஞ்சம் ஸந்தோஷமடையட்டுமே என்றுகொடுக்க முன்வந்தான். தான் கொடுத்த பணத்தை வேண்டாமென்று உபாத்யாயர்கள் சொன்னதற்குக் காரணம் அவனுக்குத் தெரிந்திருக்குமாதலின், அவனும் அவர்கள்மீது வருத்தப்பட்டிருக்கமாட்டான்.

எப்பொழுதும், வெகுமதி எதிர்பாராது பிறர்க்குத் தம்மாலானவரை உதவி புரிய, சிறுவர் யாவரும் தயாராயிருக்கவேண்டும்.

> என்று முகமனியம் பாதவர் கண்ணும்
> சென்று பொருள் கொம்ப்பர்—நீதத்தோர்
> தின்று சுவைப் பூவிற் பொலிகுழலாய் பூங்கை
> நாவிற்குதவு நயந்து. [புகழே

---

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### இரு பெண்களும் இரு குணங்களும்

ஒரூரில் சத்தியவல்லி என்றொரு பெண்ணிருந்தாள். அவளுடைய தாய் அவள் சிறு குழந்தையாய், இருக்கும்போதே இறந்துவிட்டாள். சத்தியவல்லியின் தகப்பனார் இரண்டாந் தடவை கல்யாணம் செய்து கொண்டார். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அழகுசுந்தரி என்று அவளுக்குப் பெயரிட்டார்கள் அவள் பெற்றோர்.

சுந்தரியின் தாயார் சத்தியவல்லியை மிகவும் கஷ்டப்படுத்தினாள். தன் பெண்ணுக்குப் பல விதமான புதுப் பாவாடைகளையும் பொம்மைகளையும் வாங்கிக் கொடுப்பாள். அடிக்கடி மிட்டாய்களையும் தின்பண்டங்களையும் செய்து கொடுப்பாள். நன்றாய்ச் சிங்காரித்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருப்பதே அழகுசுந்தரிக்கு வேலை. ஆனால் சத்தியவல்லிக்கு இந்த சுகம் ஒன்றுமில்லை. சுந்தரி கட்டிக் கிழித்த பாவாடைகளையே இவள் கட்டவேண்டும். கால்வயிறு கஞ்சிதான் அவளுடைய சாப்பாடு. வீட்டை விளக்கி பாத்திரங்களைத் தேய்த்து, துணிகளைத் தோய்த்து வைக்கவேண்டியது அவள் வேலை. ஏதாவது கொஞ்சம் செய்யாவிட்டால், பிரம்படி. இதைப்பற்றி அவள் ஒருவரிடமும் சொல்வதில்லை, தன் கஷ்டங்களைப் பற்றி யாரிடம் சொல்லிக் கொள்கிறது? பகவானை நம்பினால், தன் கஷ்டம் என்றைக்காவது ஒரு நாள் நீங்கு மென்பது அவள் எண்ணம். ஆகையால், அவள் பயப்படாமல் தைர்யமாகவே இருந்தாள். அவள் தகப்பனார் தன் மூத்த பெண்படும் கஷ்டங்களைக் கண்டபோதிலும், என்ன செய்வது என்று தெரியாமலிருந்தார்.

இந்த விதமாக சில வருஷங்கள் கழிந்தன. சுந்தரிக்குக் கேட்டவை எல்லாம் கிடைக்கும். அப்படி அவளுக்குக் கிடைக்கா விட்டால், வாயில் வந்தபடி திட்டுவாள். அவள் இஷ்டப்படி ஏதாவது இல்லாவிட்டால் மூர்க்க குணமும், வசையுமே வெளிவரும். சத்தியவல்லிக்கு இந்த குணங்கள் இல்லை. அவள் ஏதாவது வேண்டுமென்றால் என்ன செய்கிறது? யாரைக் கேட்டால் வாங்கிக்கொடுப்பார்கள்?—தகப்பனார்தான் தன் சித்திக்குப் பயப்படுகிறாரே! ஆகையால் அவள் ஆசைப்படாமல், கடவுளை நம்பி, திருப்தியுடன், இனிய வார்த்தைகள் பேசிவந்தாள்.

சத்தியவல்லிக்குக் கல்யாணம் செய்யவேண்டிய காலம் வந்தது. அவளுடைய தகப்பனாருக்குத் தன் பெண்ணை ஒரு ஏழைக்காவது கல்யாணம் செய்துவிடலாம் என்று எண்ணம்.

---

கடல் வற்றிக் கருவாடு தின்னலாமென்று உடல் வற்றிச் செத்ததாம் கொக்கு.

ஆனால் அதற்குக்கூட செலவு கொஞ்சம் ஆகுமென்று அவன் மனைவிக்குத் தோன்றிற்று. அந்தச் செலவு செய்தால், பிற்காலத்திலும் செலவு உண்டாகும். ஆகையால் அவளை மெல்லக் கொன்றுவிட்டால் தனக்கும் தன் பெண் சுந்தரிக்கும் கஷ்டமேயில்லை என்று எண்ணமுண்டாயிற்று. ஆகையால், சத்தியவல்லியின் கல்யாணத்தைப்பற்றி அவன் கணவன் கேட்டபொழுது "இவ்வளவு கஷ்டமென்ன. நம் ஊருக்கடுத்த காட்டில் இந்திரனுடைய கோவிலிருக்கிறது. அங்கே விட்டுவிட்டால் அவனே விவாகஞ் செய்து கொள்கிறானென்று எல்லாரும் சொல்கிறார்கள். சத்தியவல்லியை அங்கே கொண்டுபோய் விட்டுவிடுங்கள். இன்றைய இராத்திரியே அவன் விவாகஞ்செய்து கொள்வான். நாளைக்காலை போய் அழைத்து வந்துவிடலாம்" என்றாள்.

வேறுவழி ஒன்றும் தோன்றாததால் சத்தியவல்லியின் தகப்பனார் ஒத்துக்கொண்டார்; சத்தியவல்லியை ஸ்நானம் செய்வித்து, கிழிந்த பாவாடைகளில், நல்லதாக ஒன்றைக் கட்டிக்கொள்ளச் சொல்லிவிட்டு தன் வண்டியைக் கட்டினான். அன்றைய தினம் சாப்பிடுவதற்கு பழைய அமுது ஒரு துண்டில் அவள் சித்தி கட்டிக் கொடுத்தாள். சத்தியவல்லி அதை எடுத்துக்கொண்டு தன் தகப்பனாருடன் புறப்பட்டாள்—"அப்பா! சனியன் தொலைந்தது!" என்று பெருமூச்சு விட்டாள் அவளுடைய சித்தி.

காட்டில் இந்திரன் கோவிலுமில்லை; இந்திரன் அங்கு வருவதுமில்லை. நடுக்காட்டில் சத்தியவல்லியை விட்டுவிட்டால் புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் அவளைக் கொன்று விடும் என்பது சத்தியவல்லியின் சித்தியினுடைய கெட்ட எண்ணம். காட்டிற்குள் சரியான பாதையில்லாததால், சத்தியவல்லியும் அவள் தகப்பனாரும் வண்டியை விட்டுக் கீழ் இறங்கி, உள்ளே நடந்து சென்றார்கள். நடுக் காட்டில், சிறிய மண்டபம் ஒன்றிருந்தது "சத்தியவல்லி, நீ இங்கேயே தங்கி இரு. இராத்திரி இந்திரன் வந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்வான், நாளைக் காலை நான் வந்து அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிவிட்டு சத்தியவல்லியின் தகப்பன் போய்விட்டான்.

சத்தியவல்லி நடுக்காட்டில் இருக்கப் பயப்பட்டாள். ஆனாலும் கடவுளைத் தியானம் செய்து கொண்டே அன்றைய மத்தியானம் முழுவதும் கழித்தாள். இருட்டான பிறகு பயம் அதிகமாயிற்று. புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் கர்ச்சிப்பது கேட்பதற்கு மிகவும் பயங்கரமாயிருந்தது. இதனுடன் மழையும் பொழிய ஆரம்பித்தது. சத்தியவல்லி குளிரினாலும், பயத்தினாலும் நடுங்கின போதிலும், பகவானை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தாள். நடு இராத்திரியில் "சத்தியவல்லி, உனக்குப் பயமாயில்லையா!" என்று ஒருவர் கேட்பதுபோல் சத்தியவல்லி காதில் விழுந்தது.

"பயமென்ன! அகதிக்குத் தெய்வமே துணை?" என்றாள் சத்தியவல்லி. இடியும் மின்னலும், மழையும் அதிகரித்தன. கொடிய மிருகங்களுடைய கர்ச்சனைகளும் நெருங்கின. சத்தியவல்லி கொஞ்சமாவது பயப்படவில்லை. திரும்பவும், "சத்தியவல்லி-உனக்குப் பயமாயில்லையா? குளிரால் நடுங்கவில்லையா" என்று யாரோ கேட்பதுபோலிருந்தது. "ஐயா, எனக்குப் பயமில்லை. என் கணவருக்காக நான் காத்திருக்கும்போது எனக்குப் பயமென்ன, குளிரென்ன!" என்றாள் சத்தியவல்லி.

உடனே இடியும், மின்னலும், மழையும் நின்றன. காடு இருந்த இடத்தில் பெரிய அரண்மனை ஒன்று தோன்றிற்று. யௌவன வயதுள்ள அழகிய புருஷன் ஒருவன் வந்து அரண்மனைக்குள் சத்தியவல்லியை அழைத்துப் போனான். அங்கே அனேகர் வந்திருந்தனர். எங்கும் வெள்ளியினாலும் பொன்னினாலும், நவரத்னங்களாலும் செய்யப்பட்ட சாமான்களாகவே இருந்தன. சத்தியவல்லி உள்ளே சென்றதும் இரண்டு ஸ்திரீகள் அவளை அழைத்துக் கொண்டுபோய் ஸ்நானம் செய்வித்து அழகிய புடவை உடுத்தினர். விவாகம் நடந்தது. உடனே அவள் புருஷன் அவளைப் பார்த்து, "சத்தியவல்லி, உன் தகப்பனார், உன்னைக் காணக் காலையில் வருவார். அவருடன் போயிரு. நான் அடுத்த வெள்ளிக்கிழமை உன்னை அழைத்துக் கொள்கிறேன்" என்றான். சத்தியவல்லியும் சம்மதித்தாள்.

சத்தியவல்லி என்ன கதியானாளோ என்று அவள் தகப்பனார் இராத்திரி யெல்லாம்

கடற்கரைத் தாழங்காய்க் கீழ் தொங்கி என்ன, மேல் தொங்கி என்ன?

கவலையாய் இருந்தான். மனைவியின் பேச்சைக் கேட்டு, பெண்ணை நடுக்காட்டில் விட்டோமே உயிருடனிருக்கிறாளோ !—என்று அவனுக்குப் பயம். அதிகாலையில் ஒருவருக்கும் சொல்லாமல் எழுந்து வண்டியைக் கட்டிக் கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான். வண்டியைக் காட்டில் கொஞ்ச தூரத்தில் நிறுத்தி விட்டு மார்பு படீர், படீர் என்றடித்துக் கொள்ள, முந்தின நாள் தம் பெண்ணை விட்ட இடத்திற்குச் சென்றான்.

அவன் கண்டது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. சத்தியவல்லி, கல்யாணப் புடவை தரித்து, ஆபரணங்கள் அணிந்து, ஓர்மரத்தடியில் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளைக் காண்பவர்கள், அவளை ஓர் அரச குமாரி என்று சொல்வார்களேயன்றி, ஓர் ஏழையின் பெண் என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்.

சத்தியவல்லியை அவள் தகப்பனார் எழுப்பி, நடந்த சமாசாரம் என்னவென்று விசாரித்தான். அவள் சொன்னதைக் கேட்கவே அவனுக்கு மிகவும் சந்தோஷமுண்டாயிற்று.

சத்தியவல்லி வீட்டிற்குப் போனபோது, யாரோ ராஜகுமாரத்தி வந்திருக்கிறாளென்று அவள் சித்தி நினைத்தாள். பிறகு தன் சக்களத்தியின் பெண் என்று அறிந்ததும், மிகுந்த அன்புடையவள்போலப் பேசி, நடந்த சமாசாரங்களை அறிந்துகொண்டாள். அவள் தன் மகளுக்கும் அம்மாதிரியான அதிர்ஷ்டம் உண்டானால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கலாம் என்று நினைக்க நினைக்க, அவளுக்கு சத்தியவல்லியின்மேல் பொறாமை யுண்டாயிற்று.

அடுத்த நாள் அவள் சுந்தரியை நன்றாய் ஸ்நானம் செய்வித்து புதுப்புடவை உடுத்திப் பல நகைகள் பூட்டினாள். பிறகு நல்ல பக்ஷணங்கள் செய்து, மூட்டை கட்டிக் கொடுத்து, 'எப்படியாவது இந்திரனை மணஞ் செய்துகொள்' என்று சொல்லி அனுப்பினாள். அவள் கணவனும் சத்தியவல்லியை விட்ட இடத்திலேயே விட்டுவிட்டு வந்தான். முதல் நாள் நடந்தது போலவே அன்றும் நடந்தது. சுந்தரிக்குப் பயம் அதிகமாயிற்று. தன் தாயாரையும் தகப்பனாரையும், சத்துயவலலியையும் வைதாள். சத்துயவல்லியாலதானே இவ்வளவு கஷ்டமும். "அகமுடையானும வேண்டாம்-மடையனும் வேண்டாம்" என்றாள் சுந்தரி. 'சுந்தரி, உனக்குக் கல்யாணம் வேண்டாமா ?" என்று யாரோ கேட்பது அவள் காதில் விழுந்தது. 'கல்யாணமும் வேண்டாம், கல்லெடுப்பும் வேண்டாம். எனக்கென்ன இந்த இழவு எல்லாம்" என்றாள் சுந்தரி. யாரோ சிரிப்பதுபோல் அவள் காதில் விழுந்தது. "நான் கஷ்டப்படுவது எனக்கல்லவா தெரியும். உனக்கென்ன கேடு. நீ சிரிப்பாய்" என்றாள். சிறிது நேரத்திற் கெல்லாம் "சுந்தரி, நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா ?" என்று யாரோ கேட்பது போலிருந்தது. அவள் முன்போலவே பதில் சொன்னாள். "சரி, கல்லெடுப்புத்தான் உனக்கு" என்று யாரோ கோபத்துடன் சொல்வதுபோ லிருந்தது.

சுந்தரி உட்கார்ந்திருந்த இடத்திற்கு மேலிருந்த கிளைமீது இடி விழ அது முறிந்து அவள் மேல் விழுந்தது. மின்னலின் வெளிச்சத்தினால், அவள் பார்வையும் போயிற்று. ஓவென்று அலறிக் கீழே விழுந்தாள்.

சுந்தரியின் தாயார் அதிகாலையில் எழுந்திருந்து தன் கணவனை எழுப்பி, இரண்டு வண்டிகள் கட்டிக்கொண்டு வரச்சொல்லி, அவைகளுடன் காட்டிற்குள் போனாள். அங்கே குருடாய், மழையால் நனைந்து, கை ஒடிந்து நினைவற்றுக் கிடந்தாள் சுந்தரி. வீட்டிற்கு வந்ததும் சமாசாரம் என்னவென்று விசாரிக்க உண்மை விளங்கிற்று.

அடுத்த வெள்ளிக்கிழமை ஓர் அரசகுமாரன் வந்து சத்தியவல்லியை அழைத்துக் கொண்டு போய்விட்டான். தன் சிறிய தாயார் தன்னைக் குரூரமாய் நடத்தினதை மறந்து சுந்தரியையும் அவள் தாயாரையும் சத்தியவல்லி அடிக்கடி வந்து விசாரித்துக்கொண்டு, தன் தகப்பனாரை நல்ல நிலைமையில் வைத்தாள்.

---

சந்தாதார்க்கு மாத்திரமே குறைந்த விலை

| | | | |
|---|---|---|---|
| மரகதவல்லி | ... | அணா | 8 |
| பஞ்சரத்தினம் | ... | ,, | 12 |
| இயற்கை அற்புதங்கள் | ... | ,, | 8 |
| ஆரியமத உபாக்கியானம் | ... | ,, | 8 |
| ஸ்ரீராமாயண ஸாரம் | ... | ரூ. | 1 |
| ஐரோப்பிய மஹா யுத்தம் | ... | ,, | 1 |

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**மாஜி திவான்ஜி ஸ்ரீமான் சங்கரய்யாவின் தேக வியோகம்**

வயோவிருத்தராயும், இந்திய ஜனஸமூகத்தின் அபிவிருத்தியை எப்போதும் கருதுபவராயும், கல்யாண குணங்கள் பொருந்தியவராயும் நமது அபிமானிகளுள் ஒருவராயும் இருந்த ஸ்ரீமான் சங்கரய்யாவின் தேக வியோகத்தைக் கேட்டுப் பெரிதும் துக்கிக்கிறோம். ஸ்ரீமானவர்கள் கி. பி. 1843-ம் வருஷத்தில் ஜனனமானார். அதிபால்யமான 18வது பிராயத்திலேயே அவர் பி. ஏ. பரீக்ஷையில் தேறி, ஐந்து வருஷம் வரையில் சென்னை வித்தியா இலாகாவில் உத்தியோகத்திலிருந்து பின்னர் கொச்சி ஸம்ஸ்தானத்தில் ஜட்ஜாக நியமனம் பெற்றார். அப்பால் அவர் திவான் பேஷ்காரானதும் மூன்று தரம் திவான்ஜியாக வேலை பார்த்ததும், கொச்சி வாசிகளுக்காக அவர் செய்த அரும் பெரும் முயற்சிகளும் நாடறிந்த விஷயங்களாம். வேலையை ராஜி வைத்து வந்த பின்னர், அனேக சன்மார்க்க விஷயங்களில் கருத்தைச் செலுத்திப் பொது நன்மைக்காகப் பெரிதும் உழைத்துவந்தார். 1880-ம் வருஷத்தில் "ஹிந்து" ஸபையை ஸ்தாபித்து அதன் மூலமாக ஆர்யதர்மத்தைப் பிரபலப்படுத்த முயன்றார். வித்யா விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைக்கு திருச்சிராப்பள்ளி நாஷனல் ஹை ஸ்கூலே உதாரணமாகச் சொல்லலாம். ஸ்ரீமானவர்களுடைய ஔதாரியத்தைப்பற்றி நாம் விஸ்தரிக்கவேண்டிய அவசியமில்லை. திருச்சி முனிஸிபல் ஆஸ்பத்திரியில் இவர் செலவில் கட்டப்பட்டிருக்கும் பிரஸவ அறை, நகர் மண்டபத்தில் ஏற்படுத்திய வேத வேதாந்த ஆச்ரமம், சென்னைக் கோஷா ஆஸ்பத்திரியில் இவரது செலவில் ஒரு படுக்கை, சர்வகலாசாலையில் வேல்ஸ் இளவரசர் இந்நாட்டுக்கு விஜயம் செய்ததன் ஞாபகார்த்தமாய் ஏற்படுத்திய சன்மானப் பதக்கம், ஆகிய இவையும் இவைபோன்ற பிறவும் ஸ்ரீமானவர்களுடைய பரோபகாரக் குணத்தைத் தெரிவிக்கும். ஸ்ரீமானின் புத்திரர்களான திருச்சி ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் K. S. சாம்பசிவ ஐயரவர்கள், மைசூரில் இரண்டாவது கவுன்ஸிலர் K. S. சந்திரசேகர ஐயரவர்கள், மதுரையில் டிஸ்டிரிக்ட் முன்சீபு உத்தியோகத்திலிருக்கும் K.S. கோபாலரத்னமய்யரவர்கள் ஆகிய அனைவருக்கும் நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

**சென்னையில் ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா.**

நமது மாகாணத்தில் ஏற்பட்டுள்ள உத்யோகங்களில் பத்திரப் பதிவு இலாகாதான் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாத டிபார்ட்டுமெண்டாகும். அதில் உள்ள உத்யோகஸ்தர்களில் பெரும்பான்மையோர், ஆயுளளவும் அதிகச் சம்பளம் பெறாமல் போகின்றனர் என்பது அபிமானிகளுக்குத் தெரிந்த விஷயம். டிபார்ட்மெண்டு ஆரம்பமான காலத்தில், அவகாசம் நிரம்பக் கிடைக்குமென்ற காரணத்தால் இதில் புகுந்தவர்களில் சிலர் நம் மாகாணத்திலும் பிறவிடங்களிலும் மகோன்னதபதவியை அடைந்திருக்கின்றனர். காலஞ்சென்ற ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரவர்கள், திருவாங்கூரில் திவான்ஜியாவிருந்த சருக்கை கோபாலாசாரியாரவர்கள், மைசூரில் கவுன்ஸிலராகவிருந்த ஸ்ரீமான் நஞ்சுண்டய்யா அவர்கள், தற்காலம் போர்டு மெம்பராகவிருக்கும் கனம் அஜிஸுத்தீன் கான் பஹதூரவர்கள், ஹிந்துப்பத்திரிகையின் அதிபரான ஸ்ரீமான் கஸ்தூரி ரங்கய்யங்காரவர்கள், இவர்களெல்லோரும் பிரதமத்தில் ஸப்ரிஜிஸ்டிரார்களாகவே இருந்து மேல் ஸ்திதிகளுக்கு வந்தவர்கள். இந்த டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் குறைவாகவிருந்த துர்த்தசையைக் கவர்ன்மெண்டார் ஒருவாறு நீக்கியுள்ளனர். இதுவரையில் ஜில்லா ரிஜிஸ்ட்ரார்களின் சம்பளம் ரூ 200 முதல் 500 வரையில் இருந்தது. இனி ரூ 250 முதல் 700 வரையில் போகும். ரிஜிஸ்ட்ரார்களின் பிரயாண வர்த்தனை, முதல் வகுப்பு உத்தியோகஸ்தர்களுக்கு உள்ளதைப் போலக் கொடுபடுமாதலாலும், அவர்களுடைய சம்பளவிகிதம் வருஷா வருஷம் ரூ. 25 ஆக உயருமாதலாலும், இனி அவர்களுடைய குறைபாடுகள் நீங்கக் காரணமுண்டு. ஸப்ரிஜிஸ்ட்ரார்களுடைய சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்ற பிரார்த்தனையும் இப்போது கவர்ன்

கடன்காரனுக்குக் கடனும், உடன் பிறந்தானுக்குப் பங்கும் கொடுக்கவேண்டும்.

மெண்டார் முன் இருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அவர்களுடைய தசையும் சவுகரியமாக முடியுமென எதிர்பார்க்கிறோம்.

* * *

**ஜெயில் கமிட்டி.**

இந்தியாவிலுள்ள சிறைச்சாலைகளின் நிருவாகத்தையும், அமைப்பையும் பற்றித் தீர ஆலோசித்து, நாடு முழுவதற்குமே பொருந்தக்கூடிய ஒரு ஏற்பாட்டை உண்டாக்குவதற்காகக் கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கின்றனர். கமிட்டியார் முதலில் லண்டன் நகரில் கூடி, பின்னர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வழக்கத்திலிருக்கும் சிறை முறைகளைக் கவனித்து வந்து கடைசியாக இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்களாம். சிறைச்சாலைகளின் உபயோகத்தை விஸ்தரிப்பது, அவைகளின் நிர்வாகத்தைச் செம்மையாக்குவது, கைதிகளைத் தராதரங்கொண்டு பிரத்யேகப்படுத்துவது, சிறையை விட்டு வந்தவர்களுக்குக் காலக்ஷேபம் செய்யவும் ஜன ஸமூகத்தில் சேரவும் நல்ல உபாயத்தைத் தேடிக்கொடுப்பது, இவைபோன்ற காரியங்களைக் கமிட்டியார் தீர விசாரித்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஆலோசனை சொல்வார்கள். பொதுவாகக் கவனிக்குமிடத்து, மற்றைய நாடுகளில் அனுபவ சித்தமாகத் தெரிந்துகொண்ட முறைகளில் இந்தியாவில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக் கூடியவை எவை யென்பதைத் தெரிவிப்பார்கள்.

* * *

**ஐக்கிய மாகாணத்தில் ஓர் புதிய பத்திரிகை**

ஐக்கிய மாகாணத்தில் சர்க்கார் செலவில் ஒரு வாராந்தப் பத்திரிகை பிரசுரிப்பதற்கான ஏற்பாடுகள் ஆகிக்கொண்டு வருகின்றனவெனத் கேள்விப்படுகிறோம். அதில் அந்தந்த வாரத்தில் நடக்கும் உலக சமாச்சாரங்களும், ஏகாதிபத்ய சம்பந்தமான இதர விஷயங்களும், கிராமவாசிகளுக்கு உபயோகமான குறிப்புகளும் ஜனங்களுடைய கடமைகளைப்பற்றிய விபரங்களும், கவர்ன்மெண்டார் அறிக்கைகளும் வெளியாகுமாம். ராஜ்ய தந்திர விஷயங்களும், விளம்பரங்களும் அதில் வெளிவரா. இதற்குச் சுமார் ரூ. 115,000 செலவாகுமென்றும் பத்திரிகையை நடத்துவதற்கு ஒருஆலோசனை ஸபை அமைக்கப்படுமென்றும் தெரிகின்றது. இப்படி அதிகச் செலவில் ஒரு பத்திரிகையைப் பிரசுரிப்பதைக் காட்டிலும், அனேகம் பத்திரிகாசிரியர்களுக்குப் போதுமான பண உதவி செய்து, அவைகளை விருத்திக்குக் கொண்டு வருவது மேல், என்பது நமது அபிப்பிராயம்.

* * *

**ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனம்**

இந்தியாவில் வழங்கிவரும் சுதேச பாஷைகளில் நமது தமிழைத் தவிர மற்றைய பாஷைகள் எல்லாம் வரவர முன்னேற்ற மடைந்து வருகின்றனவென்பது மறுக்கவொண்ணாத விஷயம். வருஷா வருஷம் மேற்படி பாஷைகள் விஷயமாக மஹாநாடுகள் கூடி ஆகவேண்டிய காரியங்களைத் தீர்மானிப்பது, இப்படிப்பட்ட முன்னேற்றத்துக்கு முதற் காரணமாம். வங்காளி, தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம், மலையாளம் முதலிய பாஷைகளின் மஹாநாடு அவ்வப்போது கூடுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் நமது தமிழ் விஷயமான மஹாநாடு இனிமேல்தான் எற்படவேண்டும்.

நிற்க, சென்ற மாதம் பம்பாய் நகரத்தில், கனம் ஸ்ரீமான் மதன் மோஹன மாலவியாவின் அக்கிராசனத்தின்கீழ் நடந்தேறிய எட்டாவது ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனத்தைப் பற்றிய விசேஷங்களை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். தீர்மானங்களில் முக்கியமானது ஹிந்தி பாஷை, ராஷ்டிர பாஷையாக வேண்டுமென்பது. ஹிந்தி பாஷையில் மொழி பெயர்ப்புச் செய்வதற்காக சத்ரபதி காயக்வார் மஹாராஜா அவர்கள் ரூ. 5,000 வெகுமதியளிப்பதாக வாக்களித்திருக்கிறார். ஹிந்தி பாஷையை நாடெங்கும் பரவச் செய்வதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றன. அடுத்த வருஷத்திய மஹாநாடு பாடலிபுரத்தில் கூடும். நமது தமிழ்ப் பாஷையின் துர்த்தசை எவ்வாறு எப்போது நீங்கும்?

## ஆரியமத உபாக்கியானம்
முதல் பாகம்

சிறந்த நீதிக்கதைகள் கொண்டது. அநேகம் அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. விலை அணு 8.


மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான், மரம் ஏறிக் கைவிட்டவனும் கெட்டான்.




லார்ட் வில்லிங்டன்

**His Excellency Lord Willingdon**



லேடி வில்லிங்டன்

**Her Excellency Lady Willingdon**